பக்கங்கள்: 12+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 07 செவ்வாய்க்கிழமை (21.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :114

# தமிழர் தாயகத்தில் திருகோணமலை, அம்பாறை தவிர்ந்த ஆறு மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு

## வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு அச்சில்

கொழும்பு, மார்ச் 21

**வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள 45 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.**

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய ஆறு மாவட்டங்களிலும் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலர்கள் வழங்கிய கருத்துகளின் அடிப்படையில் இந்த மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் முடிவை தேர்தல்கள் ஆணையாளர் நேற்று எடுத்தார்.**

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு அச்சாகி வெளியாகவிருந்தது. இரு மாநகர சபைகள், ஆறு நகரசபைகள், 37 பிரதேச சபைகளுக்கான தேர்தல்களே ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் தேர்தல்களுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலர்களை அழைத்து கடந்த சனியன்று தேர்தல்கள் ஆணையாளர் ஆலோசனை நடத்தியிருந்தார்.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரச அதிபர்களே தெரிவத்தாட்சி அதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர்.

தமிழர் தாயகத்தில் உள்ள 8 மாவட்டங்களில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனையவற்றின் அரச அதிபர்கள் தத்தமது பிரதேசங்களில் தேர்தலை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை இல்லையென்று ஆலோசனை கூறியதையடுத்து அந்த 6 மாவட்டங்களிலும் தேர்தலை ஒத்திவைக்க தேர்தல் ஆணையாளர் முடிவு செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க-3)

## தேசிய அரசுக்கு ஐ.தே.க. இணங்காது!

கொழும்பு, மார்ச் 21

அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி. விலகும் பட்சத்தில் அரசுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கவோ அல்லது அரசுக்கு முண்டு கொடுத்து அதனைக் காப்பாற்றவோ ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் முன்வர மாட்டாது. ஜனாதிபதி முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு மட்டுமே ஐ.தே.கட்சி ஆதரவு வழங்கும். அரசின் பெரும்பான்மையைக் காப்பாற்றுவதற்கு அல்ல.

ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க 'உதயன்' பத்திரிகைக்கு மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட்டால் புலிகள் நாளையே அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு

கொழும்பு, மார்ச் 21

அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் தமது அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்காக அங்கு செல்வதற்குப் புலிகள் தயாராக இருக்கிறார்கள்.

உரிய பாதுகாப்பு உத்தரவாதம் சம்பந்தப்பட்ட தரப்புகளினால் வழங்கப்படுமானால் முக்கிய தமிழ்ப் பிரதேசங்களுக்கு நாளையே விடுதலைப் புலிகளின் போராளிகள் செல்வர்.

- விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்தன.

இயல்பு நிலைமை ஏற்படுத்தப்படுமானால் தமது போராளிகள் அரசியல் பணிகளுக்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மீண்டும் செல்வர் என்று கடந்த மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுகளின்போது புலிகள் தெரிவித்தனர்.

அதன்படி யாழ். மாவட்டம் உட்பட அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முக்கியமான இடங்களுக்குச் செல்வதற்குப் புலிகளின் போராளிகள் தயாராகி வருகின்றனர் எனத் தெரிகின்றது.

அரசியல் பணிக்காக 35 போராளிகள் வன்னியிலிருந்து யாழ் மாவட்டம் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

எனினும், அவர்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பிடமிருந்தும், கண்காணிப்புக் குழுவினரிடமிருந்தும் புலிகளின் தலைமை எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது.

அந்த உத்தரவாதம் இன்று கிடைக்குமானால் புலிகளின் அரசியல் போராளிகள் நாளையே யாழ். மாவட்டத்துக்குச் செல்வர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைப் பின் தொடர்ந்து சென்று படையினர் தாக்கியதால்தான் அவர்கள் பேச்சுக்கு வந்தனர்

## வெட்டி வீழ்த்துகிறார் இராணுவத் தளபதி



"இராணுவத்தின் மீது கடந்த காலங்களில் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளை நாம் விட்டு விடவில்லை. நான் பதவியேற்றதும் புலிகளைப் பின்தொடர்ந்து தாக்கினோம். அதனாலேயே அவர்கள் இன்று சமாதானப் பேச்சுகளுக்கு வந்துள்ளனர்." - இவ்வாறு இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"இம்முறை இலங்கை அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களைப்போல் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சி சமாதானப் பேச்சுகளுக்குச் செல்லாது கௌரவமான முறையில் பேச்சுகளை நடத்த முன்வந்துள்ளது. எனவே, பேச்சு

(2ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய கல்விச்சுடரில்

**உயர்தர மாணவர்களின் இரசாயனவியல் வினாத்தாள், இரசாயனவியல் I விடைக் குறிப்புகள், இணைந்தகணிதம் II விடைக்குறிப்புகள், தரம் 9 - ஆங்கிலம் வினாத்தாள், விஞ்ஞானம் வினாத்தாள், தரம் 11 விஞ்ஞானம்.**

# சந்திரிகாவுக்கான சிறப்பு சலுகைகளை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 21

விசேட அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்தின்படி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வழங்கப்பட்ட காணி, அளவுக்கு அதிகமான பாதுகாப்பு வசதிகள், பணியாளர்கள் என்ற சலுகைகள் அனைத்தையும் இடைநிறுத்தும் இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றைக் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று விடுத்தது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, நிமல் காமினி அமரதுங்க ஆகியோரைக்கொண்ட ஆயமே இந்த உத்தரவை விடுத்தது.

சட்டத்தரணிகளான நிரோஷன் செனரத், டி.எம். திஸநாயக்கா, அஜித் லியனகே ஆகிய மூவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட பின்னர் நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

1986ஆம் ஆண்டின் ஜனாதிபதி உரிமைகள் சட்டத்திற்கு மாறாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வழங்கப்பட்ட சலுகைகளையே இடைநிறுத்தும்படி உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மனுதாரர் தரப்பில் நேற்று ஆஜரான சட்டத்தரணி பீற்றர் ஜயசேகர தனது வாதத்தில் சுட்டிக்காட்டியதாவது:-

மனுதாரர்கள் மூவரும் நாட்டிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரி செலுத்துபவர்கள். நாட்டின் நிதி, சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் மோசடியாக 'சிறப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சூட்டுக் காயங்களுடன் சடலம் மட்டு.வாவியில் மிதந்து வந்தது

காத்தான்குடி, மார்ச் 21

மட்டக்களப்பு, 'மன்றோசா' நிலையத்திற்குப் பின்புறமாக வாவியோரம் இளைஞர் ஒருவரின் சடலம் கைகள் நைலோன் கயிற்றினால் கட்டப்பட்டு, தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டது.



அந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

ஆற்றில் மிதந்துவந்த இந்தச் சடலம் தமது வலையில் சிக்கியதாகவும், தாம் அதனைக் கரைக்குக் கொண்டுவந்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளை

(12ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயை விலக்கக்கோரி பிக்குமார் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 21

சமாதானப் பேச்சுக்கு அனுசரணைப்பணி வகித்துவரும் நோர்வேயுடனான உறவை இலங்கை முற்றாக வெட்டிவிட வேண்டும் எனக்கோரி தேசிய பிக்குமுன்னணி இன்றுமுதல் எதிர்ப்புப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கொழும்பு விஹாரமாதேவி பூங்காவிற்கு முன்பாக ஒன்று கூடும் தேசிய பிக்கு முன்னணியினர் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இப்பேரணி நோர்வேத் தூதரகத்தை நோக்கிச் சென்று நோர்வே தூதரகத்தை முற்றுகையிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துத தேசிய பிக்கு முன்னணியின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மினிக்கச்சேரி நடத்தி போலி ஆவணம் வழங்கியவருக்கு பதினைந்துவருட கடூழியச் சிறைத்தண்டனை விதிப்பு

அரியாலை புங்கன்குளம் பகுதியில் போலி மினிக்கச்சேரி நடத்தி போலி ஆவணங்களைப் பொதுமக்களுக்கு விநியோகித்த நபருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் 15 வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்ததுடன், 5 குற்றச் சாட்டுக்கும் தலா 3 வருடங்களாக தொடர்ச்சியாகத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், மினிக்கச்சேரி நடத்திய குற்றச்சாட்டின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அரச சாட்சியாக மாறியதையடுத்து அவர் நீதிமன்றினால் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

முதலாவது சந்தேக நபர் மீது ஐந்து குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

போலியான ஆவணங்களை கள்ளத்தனமாகத் தயாரித்தமை, அழைப்புக் கட்டளை மற்றும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தயாரித்தமை, வஞ்சகமான முறையில் போலி ஆவணங்கள் தயாரித்தமை, போலியான உறுதிகளுக்கு பெறுமதியிட்டு தயாரித்தமை, போலியான றபர் முத்திரை தயாரித்தமை போன்ற ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

அத்துடன், சம்பந்தப்பட்ட நபரின் கைவிரல் அடையாளம், கைவிரல் அடையாளம் பரிசோதிக்கும் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையின் பின்னர் அது பற்றிய அறிக்கை யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில்:-

கைவிரல் அடையாளத்தில் குற்றம் கண்டறியப்படவில்லை என்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் முக்கிய சந்தேக நபர் நேற்று யாழ். நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது அவர் தனது குற்றத்தினை ஒப்புக் கொண்டார்என்றும் -

இதனையடுத்து நீதிவான் ஒவ்வொரு குற்றத்திற்கும் தலா மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனைப்படி 15 வருட சிறைத் தண்டனையை விதித்தார்.

அத்துடன், ஐந்து குற்றத்திற்கும் ஐயாயிரம் ரூபாவீதம் தலா 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்தார்.

குற்றப்பணம் செலுத்தத் தவறின் மேலும் முப்பது மாத கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் தமது தீர்ப்பில் தெரிவித்தார். (எ-7)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வேலணை,மார்ச்21

வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. தொடர்ந்து பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் நடைபெறும். (எ-167)

## தபால்மூல வாக்களிப்பு இன்றும் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட நிலையிலும் யாழ். மாவட்டத்தில் இரண்டாவது நாளாக இன்றும் தபால்மூல வாக்களிப்பு நடைபெறும் என்றும்-

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் உரியமுறைப்படி வாக்குச்சீட்டுகளை தமக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் - யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

தற்போது ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் மீண்டும் நடந்தால், தற்போது அளிக்கப்படும் தபால்மூல வாக்குகளே எண்ணிக்கைக்கு உட்படுத்தப்படும் என்றும் - அவர் மேலும் கூறினார். (எ)

### பேராசிரியர் மோகனதாஸின் சேவைக்காலம் பூர்த்தியடைந்ததையடுத்து

## பதில் துணைவேந்தர் ஒருவரை நியமிக்குமாறு கல்வி அமைச்சுக்கு கடிதம் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்21

பதில் துணைவேந்தருக்குரிய சேவைக் காலம் நிறைவடைந்ததையடுத்து தமது பணிகளைப் பொறுப்பேற்பதற்கு வசதியாக பதில் துணைவேந்தர் ஒருவரை நியமிக்குமாறு நேற்றுடன் தமது பதில் துணைவேந்தர் சேவைக்காலத்தை நிறைவு செய்த பேராசிரியர் சு.மோகனதாஸ் கல்வி, 'உயர்கல்வி அமைச்சினைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், அவரது நியமனத்திற்கு பல்கலைக்கழக மாணவர் மத்தியில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால், புதிய துணைவேந்தர் பதவியேற்பது தாமதமாகியது. இந்நிலையில், பதில் துணைவேந்தராகப் பதவியேற்குமாறு பேராசிரியர் எஸ்.மோகனதாஸை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து அவர் பதில் துணைவேந்தராகப் பணியாற்றிவந்தார். எனினும், அவருடைய பதில் துணைவேந்தர் பதவிக்குரிய சேவைக்காலமும் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்த நிலையில்தாம், ஓய்வுபெறவுள்ளதால் பணியைப் பொறுப்பேற்பதற்கு வசதியாக வேறொருவரை பதில் துணைவேந்தராக நியமிக்குமாறுகோரி பேராசிரியர் மோகன தாஸ், கல்வி அமைச்சரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

கல்வி அமைச்சிடம் இருந்து நேற்றுமாலை வரை இந்தக் கடிதத்துக்குரிய பதில் கிடைக்கவில்லை என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-14)

## சின்னக்கடை கிராம அலுவலரைத் தாக்கிய கணவனும், மனைவியும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,மார்ச்21

கடமையிலிருந்த கிராம அலுவலர் மீது தாக்குதல் நடத்தினார்கள் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்ட கணவனையும் மனைவியையும் எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

ஜே/72 சின்னக்கடை பகுதிக்கான கிராம அலுவலர் கந்தசாமி செல்வகுமார் நேற்றுக் காலை சின்னக்கடைப் பகுதியில் உள்ள அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தார் என்றும்-

அச்சமயம் அங்கு வந்த மேற்படி கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் அகஸ்ரின் அல்பிரட் மற்றும் அவரது மனைவியான அல்பிரட் மேரி திரேசா ஆகியோர் திடீரென கிராம அலுவலர் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் - கூறப்பட்டது.

இது குறித்து யாழ். பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைய டுத்து பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட கணவனும், மனைவியும் யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட னர். அப்போது நீதவான் இவர்கள் இருவரை யும் எதிர்வரும் 3ஆம் திகதிவரை யும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (எ)

## 'மானிடம் வெல்லுமம்மா' இசைத்தட்டு கைலாசபதி அரங்கில் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

''ஆழிப்பேரலை அனர்த்தத்தின் அவலங்களைச் சித்தரிக்கும் மானிடம் வெல்லுமம்மா...'' இசைத் தட்டு வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட மாணவன் ஜெ.ஜெயராஜின் தயாரிப்பில் இந்த இசைத்தட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்குவர்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இசைத்தட்டை வெளியிட்டு வைப்பார். இசைத்தட்டுக்கான திறனாய்வை பேராசிரியர் அ.சண்முகதாஸும் ஏற்புரையை தயாரிப்பாளர் ஜெ.ஜெயராஜும் வழங்குவர். (த)

## தனியார் பஸ் கட்டணம் உடனடியாக உயராது

### மானியம் வழங்க அரசு இணக்கம்

கொழும்பு, மார்ச் 21

பஸ் கட்டணத்தை உடனடியாக அதிகரிப்பதில்லை என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்றுக்காலை போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின்போது இது தொடர்பான இணக்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சின் சார்பில் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், போக்குவரத்துச் சபைத் தலைவர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் -

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர் கெமுனு விஜயவர்தனவும், சங்கத்தின் ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பஸ் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டத்தைத் தாம் தற்காலிகமாகக் கைவிட்டிருக்கிறார்கள் எனவும், போக்குவரத்து அமைச்சர் தமக்கு அளித்த வாக்குறுதிகளை இரண்டு வார காலத்துக்குள் நிறைவேற்றத் தவறினால் பஸ் கட்டணத்தை அதிகரிக்கத் தாம் திட்டமிட்டிருக்கிறார்கள் எனவும் கெமுனு விஜயவர்த்தன தெரிவித்தார். (எ-க)

---

# புலிகளைப் பின் தொடர்ந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் புலிகள் பலமடைந்துவிடுவார்கள் என்று எவரும் அஞ்சத் தேவையில்லை.'' - என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

வவுனியாவிற்கு கடந்த சனியன்று விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதி அங்கு இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு கருத்துகளை வெளியிட்டார்.

இலங்கை இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற பின்னர் லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா அடிக்கடி வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம்செய்து அங்கு கடமையிலுள்ள இராணுவத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

இதன் ஒரு கட்டமாக வவுனியாவிற்குச் சென்ற இராணுவத்தளபதி வவுனியாவில் கடமையாற்றிவரும் இராணுவ அதிகாரிகளையும், படைச் சிப்பாய்களையும் சந்தித்துக் களநிலைவரங்கள் குறித்துக் கலந்துரையாடினார். அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்துகொண்டார் அங்கு உரையாற்றும் போது அவர். மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தும் போது கடந்த காலங்களைப் போலன்றி இராணுவம் மௌனமாக இருக்கும் நிலை இப்போது மாறியுள்ளது.

சமாதான முயற்சிகள் நனீடபெற்ற கடந்த காலங்களில் எமது படையினர் அவர்களது கடமையைச்செய்ய முடியாது பல அழுத்தங்கள் காணப்பட்டன. விடுதலைப்புலிகளினால் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. குண்டுத் தாக்குதல்கள், பங்கர்கள் மீது தீ வைக்கும் சம்பவங்கள், வாகனங்களைச் சேதமாக்குதல் மற்றும் தீ வைத்தல் ஆகிய சம்பவங்கள் இடம்பெற்றன. அப்போது அவற்றைப் பொறுத்துக்கொண்டு செய்வதற்கு ஒன்றுமில்லாமல் வாயை மூடிக்கொண்டிருந்தோம். விரும்பியோ, விரும்பாமலோ அவ்வாறு இருக்க நேரிட்டது.

பின்பு அந்த நிலைமை தீவிரமடைந்து கிளைமோர் தாக்குதல்கள்வரை சென்றன. இதனால் யுத்த சூழ்நிலையொன்று ஏற்பட்டது. அப்போது பொது மக்களே தாக்குதல்களை நடத்துகிறார்கள் என்று அவர்கள் கூறி வந்தனர். இதனால் நாம் வாயை மூடிக்கொண்டிருப்போம் என அவர்கள் நினைத்தார்கள்.

எனினும், இராணுவம் அந்தளவிற்குப் பயப்படவில்லை. முன்பிருந்த நிலையைவிட நான் கடமையை பொறுப்பேற்றது முதல் தாக்குதல்கள் ஐம்பது மடங்காக அதிகரித்தன. நான் கடமையைப் பொறுப்பேற்பதற்காகக் கையெழுத்திடும்போது யாழ்.குடாநாட்டில் கிளேமோர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 15 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இரண்டு நாட்களின் பின்னர் மேலும் சம்பவங்கள் இடம்பெற்றன. செட்டிக்குளம், மன்னார், கிழக்குப் பகுதி உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் தாக்குதல்கள் இடம்பெற்றன. நாம் இந்த சம்பவங்களால் பயந்து முடங்கிக் கிடக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்காகக் குரல்கொடுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு தரப்பினர், இராணுவத்தினர் கடந்த ஒன்றரை வருடங்களாக இருந்ததுபோல் இப்போதும் வெள்ளைக் கொடிகளைக் கட்டிக்கொண்டு அமைதியாக இருப்பார்கள் என்று கருதினர். எனினும், நாம் அந்த நிலைமைகளுக்கு முகம்கொடுத்து பின்னர் எம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தினோம். அதற்குப் பின்னர் எம்மீது தாக்குதல் நடத்தியவர்களைத் தேடிச்சென்று தாக்கினோம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டோம். இவ்வாறு செய்து எமது தன்மானத்தைப் பாதுகாத்ததோடு நாட்டின் கௌரவத்தையும் பாதுகாத்தோம்.

இந்த நிலைமைகள் காரணமாக சமாதானப் பேச்சுகளுக்கு வரமாட்டோம் என்று கூறிக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் பேச்சை நடத்த விரைவாக இணக்கம் தெரிவித்தனர் என்று நான் கருதுகிறேன்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அடிமையாகிப் பேச்சுகளை நடத்தாது புதிய முறையில் அதனை நடத்திவருகின்றது.

நாட்டின் பிரதான பிரச்சினையை சமாதான முயற்சிகள் மூலம் தீர்க்க வேண்டுமென்பதே அனைவரினதும் விருப்பமாகவுள்ளது. அதனால்தான் அரசாங்கம் சமாதானப் பேச்சு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. எனினும், இந்த நடவடிக்கையை முன்னர் இடம்பெற்ற போலன்றி மிகவும் மாறுபட்ட வகையிலேயே மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கௌரவமான சமாதானம் என்பதே அந்த மாற்றமாகும். சமாதானப் பேச்சுகளுக்குச் சென்றாலும் அதில் கௌரவமான முறையில் ஈடுபடவே அரசாங்கமும், நாமும் திட்டமிட்டுள்ளோம். முன்னர் போல் சமாதான முயற்சி என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் மீது இருக்கும் அச்சத்தை மறைத்துக்கொள்ளவதற்காக தற்போது பேச்சுகளுக்குச் செல்லவில்லை. விடுதலைப் புலிகளுக்கு முகம்கொடுக்க அஞ்சியே கடந்த காலங்களில் சமாதான முயற்சிகள்குறித்து கதைத்தனர். அப்படியில்லாமல் விடுதலைப் புலிகள் குறித்த நம்பிக்கை காரணமாகவோ அல்லது அவர்கள் மீதிருக்கும் கருணை காரணமாகவோ இல்லை. முடிந்தால் புலிகளை அழிக்க விருப்பம் இருந்தது. எனினும் அச்சம் காரணமாக பேச்சுக்குச் சென்றனர்.

ஆனால், தற்போது நாம் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சிப் பேச்சுக்குச் செல்லவில்லை. சமாதான முயற்சிகள்மூலம் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். என்ற அவசியம் இருப்பதாலும் அதேபோல் தமிழ் மக்களுக்கு பிரச்சினையொன்று இருக்குமானால் அவற்றைத் தீர்த்து வைக்க அமைதி வழியை கடைப்பிடிக்க வேண்டும் என்பதாலும் இப்படிச் செய்கிறோம்.

எனினும், அந்த முயற்சி கௌரவமான சமாதானமாகவே இருக்கும். அரசாங்கத்தினதும், தெற்கிலுள்ள மக்களினதும், வடக்கிலுள்ள மக்களினதும், அதேபோல் முக்கியமாக இராணுவத்தினதும் தன்மானத்தை பாதுகாக்கும் வகையிலான சமாதான முயற்சிகளுக்கே செல்கின்றோம்.

அதனால், இம்முறை இந்தப் பேச்சுக்களால் நாம் நெருக்கடிக்குள் தள்ளப்படுவோம், புலிகள் பலமடைந்துவிடுவர்கள் என்று கவலைப்படத் தேவையில்லை. - என்றார் இராணுவத் தளபதி. (எ-க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# குறுகிய கால இடைவெளியை சரியாகப் பயன்படுத்துக!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதலாவது சுற்றுப் பேச்சுகள் ஜெனிவாவில் நடைபெற்று முடிந்து ஒரு மாதகாலமாகின்றது. அடுத்த பேச்சுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கும் இன்னும் ஒரு மாத காலம் அவகாசம் உள்ளது.

இந்நிலையில் அடுத்த சுற்றுப் பேச்சு நடக்குமா என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

முதற்சுற்றுப் பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை இலங்கை அரசுத் தரப்பு ' சொல்லிலும் செயலிலும்' முழுவதுமாக நடைமுறைப்படுத்தும் தனது கடப்பாட்டை நிறைவு செய்யாதவரை அடுத்த சுற்றுப் பேச்சு இடம்பெறாது என்பதைப் புலிகள் தரப்பு தெளிவாகக் கோடி காட்டியுள்ளது.

முன்னைய பேச்சில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஆயுதக் குழுக்களின் - ஒட்டுப்படைகளின் - ஆயுதங்களைக் களைந்து, அவற்றின் வன்முறை நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரும் தனது கடப்பாட்டை முழுமையாகச் செயற்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளைக் கொழும்பு அரசு எடுக்காவிட்டால் அடுத்த சுற்றுப் பேச்சில் பங்குபற்றுவதா என்பதைப் புலிகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டி வரும் என்ற சாரப்படப் புலிகளின் அரசியல் தலைமை சுட்டிக்காட்டியிருக்கிறது. இது இன்றைய நிலையில் ஓர் இராஜதந்திர அழுத்தமாகவே கொள்ளத்தக்கது. ஆனாலும், அதுவே நாளை நிகழ்வுப் போக்காகி விடும் - யதார்த்தமாகிவிடும் - என்பதையும் நிராகரிப்பதற்கு இல்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுடன் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகள் தொடர்பான விடயத்தில் புலிகளின் அடிப்படைக் கொள்கை நிலைப்பாடு என்ன என்பதைப் புரிந்து கொள்வோமேயானால், புலிகளின் இன்றைய இந்த இராஜதந்திர அழுத்தம் தரும் அறிவிப்பின் பெறுபேறு என்னவாகப் போய்முடியும் என்பதை நாம் ஓரளவுக்கு ஊகித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தரிசனத்துக்கும் தமிழரின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கான அடிப்படைகளுக்கும் மத்தியில் இசைவற்ற இடைவெளிகளும் இணங்காத முரண்பாடுகளும் உள்ளன. அவற்றைப் புலிகள் அறிவார்கள் எனப் புலிகளின் தலைவர் பிரபாகரனே தெட்டத் தெளிவாகக் கூறியிருந்தார்.

*''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட சிந்தனைகளை ஆழமாக அலசிப் பார்க்கும் பொழுது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளையோ அதன் மூலக் கோட்பாடுகளையோ அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.*

*''கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப்பெரியது. எனினும், அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப்போகிறார் என்பதையும், தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப்போகிறார் என்பதையும் முதலில் நாம் அறிந்துகொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்ஷவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சிறிது காலம் நாம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவுசெய்துள்ளோம்.*

*''பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே, வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள், எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான அரசியல் வேண்டுகோளாகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, கடும் போக்கைக் கடைப்பிடித்து, காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசு முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேச சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் (அதாவது 2006 இல்) தீவிரப்படுத்துவோம்.''*

- இதுவே கடந்த மாவீரர் தினத்தின்போது தலைவர் பிரபாகரன் தெரிவித்த கருத்துக்கள். இந்த நிலைப்பாட்டின் பின்புலத்தில் தான், அடுத்த சுற்றுப் பேச்சுத் தொடர்பான புலிகளின் எண்ணப் போக்கை - கருத்தியலை - நாம் நோக்கவேண்டும்.

நடைபெற்று முடிந்த ஜெனிவாப் பேச்சுக்கும், அடுத்த சுற்றுப் பேச்சுக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட இந்தக் கால அவகாசமும் தலைவர் பிரபா தமது உரையில் சுட்டிக்காட்டிய 'ஒரு குறுகிய கால இடைவெளி' என்பதுக்குள்தான் அடங்குகின்றது.

அவர் குறிப்பிடுவது போல இந்தக் கால அவகாசத்தை உரியமுறையில் பயன்படுத்தத் தவறி - உதாசீனம் செய்து - கடும் போக்கைக் கடைப்பிடித்து - காலத்தை இழுத்தடிக்க - மஹிந்தவின் அரசு முயலுமானால் தமிழரின் சுயநிர்ணயத்துக்கான போர் மீண்டும் மூளும். அது தான் நிலைமை.

என்ன செய்யப் போகின்றது தென்னிலங்கை அரசு? முடிவு ஜனாதிபதி மஹிந்தவின் கைகளில்!

# தனியார் பஸ்கள் வியாழன் முதல் பண்ணையிலிருந்தே புறப்படும்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் தனியார் சிற்றூர்திச் சேவை பண்ணை மினிபஸ் தரிப்பு நிலையத்திலிருந்து செயற்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தலை யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்திற்கு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆணையாளரால் சங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பண்ணை மினிபஸ் தரிப்பு நிலைய அமைப்பு வேலைகள் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பாகவே பூர்த்தியாக்கப்பட்டும், தாங்கள் முனீஸ்வரன் வீதி வழியாகவே வரவேண்டுமென பிடிவாதமாக இருப்பதால், இந்த பஸ் தரிப்பு நிலையத்திற்கான தங்களது சிற்றூர்தித் தரிப்பு மாற்றம் தாமதித்துவந்தது.

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் முனீஸ்வரன் வீதியிலுள்ள நடைபாதை வியாபாரிகள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் நாளை மறுதினம் நிறைவுபெறும் என எதிர்பார்க்கின்றேன்.

ஆகவே, அவர்கள் அவ்வாறு நகரும் பொழுதே தாங்களும் தங்களுடைய சிற்றூர்திகளை பண்ணை மினிபஸ் தரிப்பு நிலையத்திற்கு காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்று தரித்து நின்று முனீஸ்வரன் வீதியூடாக பஸ் நிலையத்தை அடைந்து பயணிகளை ஏற்றிச்செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் - என்றுள்ளது. (த-202)

# வண்ணை வைத்தீஸ்வரனுக்கு வெள்ளியன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம்,மார்ச் 21

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 19 தினங்கள் நடைபெறவுள்ளன. அடுத்த மாதம் 8ஆம் திகதி சப்பரத்திரு விழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்சரத பவனியும் மறுநாள் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். அன்றையதினம் மாலை 4 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் கொடியிறக்கம் இடம்பெறும்.

12ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு அம்மன் எழுந்தருளி தபசு இருப்பார். பி.ப. 3 மணிக்கு சந்திரசேகரப் பெருமான் எழுந்தருளி மாலை மாற்றி திருவீதிவலம் வருவார். தொடர்ந்து 4 மணிக்கு கன்னி ஊஞ்சலும் திருக்கல்யாணமும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (த-203)

# மறவன்புலோ மாரிஅம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்துக்கு அனுமதி

## ஆனாலும் பகலுடன் திரும்பவேண்டும் என்று படையினர் நிபந்தனை!

யாழ்ப்பாணம்,மார்ச் 21

மறவன்புலோ செல்வமுத்து மாரி அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்தை நடத்துவதற்கு படைத்தரப்பினர் அனுமதிவழங்கினர்.

ஆனால், குறித்த தினங்களில் காலை வேளையில் கோயிலுக்கு வருவோர் மாலைக்கு முன்னர் திரும்பிவிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் 27ஆம் திகதி 2ஆம் திங்கள் உற்சவமும் அடுத்த மாதம் 3ஆம் திகதி 3 ஆம் திங்கள் உற்சவமும் அடுத்த மாதம் 10 ஆம் திகதி 4ஆம் திங்கள் உற்சவமும் நடைபெறவுள்ளன.

இத்தினங்களில் காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை யாழ். நகரிலிருந்து கோவிலாக்கண்டி [illegible] துறைமுகம் வரை போக்குவரத்துச் சபையின் விசேட பஸ் சேவை இடம்பெறும்.

கோவிலாக்கண்டியிலிருந்து ஆலய நிர்வாகத்தின் ஒழுங்குபடுத்தலில் உழவு இயந்திரங்கள் மூலம் பக்தர்கள் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர் என்று நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (த-202)

# தமிழரசுக்கட்சியின் பிரசாரம் வேலணைப் பிரிவில் ஆரம்பம்

புங்குடுதீவு, மார்ச் 21

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி வேலணைப் பிரதேச சபைக்கான தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும் நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேலணைத்துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்திலும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 4 மணிக்கு நயினாதீவிலும் பிரசாரக் கூட்டமும் அறிமுகமும் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு புங்குடுதீவு, ஊரதீவு சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 4 மணிக்கு வேலணையிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. (த-188-202)

## உதயவாக்கு

வாக்குறுதி முழுமதி போன்றது கொடுத்த வாக்குறுதியை உடனே நிறைவேற்றாவிட்டால் அது நாளுக்கு நாள் தேய்ந்துவிடும்.

*- ஓர் அறிஞர்*

## நாளை

பங்குனி 08
புதன்கிழமை
22.03.2006
திதி : தப்தமி
முற்பகல் 09.10
நட்சத்திரம் : கேட்டை
காலை 06.33
சுபநேரம் : 04.47-06.17
ராகுகாலம் :12.17-01.47
(யாவும் பழைய நேரப்படி)


# ஊடக வளங்கள் நிலையத்தின் பயிற்சிநெறி ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் இதழியல் டிப்ளோமா முழுநேரப் பயிற்சி நெறி ஆரம்ப வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய விரிவுரை மண்டபத்தில் இந்த வைபவம் இடம்பெறும்.

ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வரவேற்புரை நிகழ்த்துவார். நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர், மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகை நிறுவனங்களின் பிரதிநிதிகள் வழங்குவர். சிறப்புரையை டெனிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென் றிக் குறு நெற், வீரகேசரி ஆசிரியர் ஆர்.பிரபாகரன் ஆகியோர் வழங்குவர்.



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டிற்கு அருகில் புதிய வீடு விற்பனைக்குண்டு. விலைபேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும். தொடர்புக்கு: 0773114791 (48362)

கிளிநொச்சி கச்சேரியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் (திருநகர் தெற்கு) ½ ஏக்கர் காணியில் கிணறு, மின்சாரம் வசதிகளுடன் மூன்று அறைகளுடன் நவீன முறையில் கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: வாகீசன், T.P.:0776138331 (சி/48436)

## காணி விற்பனைக்கு

பொலிகண்டி வீரபத்திரர் கோயிலுக்கும் குருநாதர் கோயிலுக்கும் அருகில் 3½ பரப்புக் காணி 'தியலம்பற்றை' விற்பனைக்குண்டு. தொடர்பு: அமிர்தா இரும்பகம், தனங்களப்பு றோட், சாவகச்சேரி. T.P.: 0776138042 (மாலை 6 மணிக்குப் பின்னர்). (48169)

வண்ணார்பண்ணை, பொன்னப்பா ஒழுங்கையில் மானிப்பாய் வீதிக்கு மிக அண்மையில் இரு வீடுகள் கட்டக்கூடிய நீள்சதுரக் காணி 3½ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 7903 அல்லது 25.03.2006ஆம் திகதிக்குப் பின் 0602158012. முகவரி: இல. 346, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (48332)

சாவகச்சேரி வடக்கு, மீசாலையில் வாகையடிச் சந்தியிலிருந்து 400 மீற்றருக்குள் கிணறு மற்றும் பயன்தரு மரங்களுடன் 12¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777550869. (48339)

திருநெல்வேலி கலாசாலை வீதியில் முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கு சமீபமாக 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் முழுமையாகவும் விற்பனை செய்யப்படும். தொடர்பு: 0777286072 (சி/48448)

கொழும்புத்துறை, துண்டி சந்திக்கு அருகில் நல்ல சுற்றாடலில் 1½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 4590829 (48352)

## வாடகைக்கு

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து 50m முன்பாக உள்ள ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இயங்கும் கட்டடத்தொகுதியில் உள்ள இல.1 கடை (32 அடி நீளம் 11அடி அகலம்) முற்பணத்துடன் / முற்பணம் இல்லாமல் வாடகைக்குண்டு. தொடர்பு:-T.P.: 077 3039422. (48131)

வேம்படிச் சந்தி, முதலாம் குறுக்குத் தெரு, இல . 175 இல்அமைந்த மேல்மாடி வீடு 9 அறைகளுடன் 2கோல் (A/C) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்குகந்தது. தொடர்பு : க.கோபால், T.P. : 077636 6020, 021 4591885. (48152)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 20.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன் -ஆலடி உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48229)

## திருமண சேவை

1979ஆம் ஆண்டில் பிறந்த ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் எம்மிடமுள்ளார். மேலும் எல்லா வெளிநாடுகளிலும் பிரஜாவுரிமை பெற்ற மணமக்கள் எம்மிடமுள்ளனர். மேலும் டாக்டர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், எஞ்சினியர்கள், வர்த்தகர்கள், லிகிதர்கள் எம்மிடமுள்ளனர். தொடர்புகளுக்கு: கமலக்கண்ணன் திருமணசேவை, இல.286, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (சந்திக்கும் நேரம் காலை 10 a.m. 2.30 p.m. மாலை 4 - 7 மணி வரை. (48359)

**The Royal College Of Jaffna**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By:விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), K.K.S. வீதி, யழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

(48368) 'The Royal is The Best' (24)

**சிறுகுறிஞ்சா இலை தேவை**

சிறுகுறிஞ்சா இலை வெட்டிய உடன் Fresh ஆக தேவை. சிறிகுறிஞ்சா வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:

BIOTEC INTERNATIONAL LTD

131/2, Palaly Road Thirunelvely Jaffna.

விவசாயப் பண்ணைக்கு அருகில்.

(47984) (21.17)

## தவறிவிட்டது

நவரட்ணராஜா, மயூரன் நிலாந்த் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. 840744655V 17.03.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 6527658 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது நிலாணி, சென்.ஜோசப் [illegible] சவேரியார் குருமடம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (48356)

[illegible] தகுந்த சன்மானம் வழங்கப்படும். (48338)

அன்ரோனிய[illegible] ஜெயராணி [illegible] கடவுச்சீட்டு 10.03.2006 அன்று மக்கள் வங்கிக்கும் 34, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 34, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். கண்டெடுத்தவர்களுக்கு உரிய சன்மானம் வழங்கப்படும். (48341)

## தேவை

இறுதியாண்டு மருத்துவபீட மாணவிக்கு சாப்பாட்டுடன் யாழ். நகருக்குள் சமீபமாக அறை வாடகைக்குத் தேவை. (பிறவுண் வீதி, நாவலர் வீதி, அரசடி வீதி விரும்பத்தக்கது) தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 021 222 6390. (48334)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969, பூராடம்,4ஆம் பாதம், செவ்.7, கிரகபாவம் 73, உயரம் 5'3'', தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. (அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.) தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், யாழ். வீதி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய். T.P.: 021 4591068 (48353)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1963, கார்த்திகை, முதலாம் பாதம்,செவ்.4, கிரகபாவம் 28, உயரம் 5'3'' மணமகளுக்குத் தனியார் நிறுவனம் நடத்தும் மணமகன் தேவை. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், சுதுமலைச் சந்தி அருகில், யாழ். வீதி, மானிப்பாய். T.P.:021 4591068 (48353)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969, திருவோணம், 2ஆம் பாதம்,செவ்.4, கிரகபாவம் 54, B.Sc. பட்டதாரி ஆசிரியைக்கு அரச உத்தியோக மணமகன் விரும்பத்தக்கது. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், சுதுமலைச் சந்தி, யாழ். வீதி, மானிப்பாய்.T.P.: 021 4591068 (48353)

**தேவை**

கணனி அறிவுள்ள தொலைபேசி இயக்குநர் தேவை.
பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 3144806

(48348) (24)

**தேவை**

போட்டோ பிரதி எடுத்தல், கொம்பியூட்டர் ரைப் செற்றிங் (தமிழ்/ஆங்கிலம்) என்பன வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் ஆண்,பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
(வேலைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 3548468

(48389) (24)

**ஐம்பொன்னில் அந்தோனியார் சிலை**

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்திற்கு மறைந்த திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்களின் ஆசியும் பாராட்டுப் பத்திரமும் பெற்ற கலாபூஷணம் எல்.கெங்காதரன் ஆச்சாரியினால் ஐம்பொன்னாலான அந்தோனியார் சிலை *(22.03.2006)* வடிவமைக்கப்படுகின்றது. இத்திருப்பணியைப் பக்தர் களே முன்னெடுத்துள்ளனர்.

- ஆலய நிர்வாக சபை.

புங்குடுதீவு -2

(48365) (24-19-14)

**பிறந்தநாள் வாழ்த்துக்கள் 21.03.2006**



மனிதர் குல மாணிக்கம் மாமேதை
மிகச் சிறந்த ஆசான் மீட்சிமையான எண்ணம்
மூத்தான முத்து மூவேந்தன் மும்மொழியில்
மென்மையான மனம் மேன்மையான குணம்
மொத்த இலக்கண வித்தகன் மோகனவதனன்
மௌனமாக மன்னிக்கும் பண்பினன்

இத்தனைக்கும் ஏற்றவர்
எங்கள் முதல்வர்
திரு. கணபதிப்பிள்ளை
**பாலசுப்பிரமணியம்**
அவரின் பிறந்த நன்னாளில்
(21.03.2006) நீடூழி காலம் வாழ்க என
இறை ஆசியுடன் வாழ்த்துகின்றோம்.

*திருமதி கி.கா.பாலகுமாரநாதன்*
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

(சி/48450) (24-19-14)

## வரணியில் படையினர் மருத்துவசேவை

யாழ்ப்பாணத்தில் 522 ஆவது படையணிக்குட்பட்ட பகுதியிலுள்ள கிராம மக்களின் நலன்கருதி இராணுவ வைத்தியக் குழுவினர் இலவச வைத்திய சேவையை நடத்தி வருகின்றனர் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 18ஆம் திகதி காலையில் வரணி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இராணுவ வைத்தியக் குழுவினால் இலவச வைத்திய சேவை ஒன்று நடத்தப்பட்டது.

போசாக்கின்மை, நோய்க்கிருமி தாக்கம், பல் நோய் போன்ற பல்வேறு நோய்களும் இனங்காணப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டதுடன், ஊட்டச்சத்து மருந்துகளும் வழங்கப்பட்டன.

இந்த இலவச வைத்திய சேவையில் பிரதேச படையணி அதிகாரி, படைப் பிரிவுகளின் கட்டளை அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(த-202)

**றமி ரெக்கோட்ஸ்**

RAMIY RECORDS AG SWISS MADE

*யாழ். மாவட்டத்தில் றமி இசைத்தட்டுகளின் போலியான இசைத்தட்டுகள் விற்பனையாகின்றன. எனவே, எமது வாடிக்கையாளர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். எமது நிறுவனத்தில் குறைந்தளவு CD யைக் கொள்வனவு செய்து தரம் குறைந்த இசைத்தட்டுகளில் அப்படியே மறுபிரதி செய்து விற்பனை செய்கின்றார்கள். எனவே, நாம் நேரடியாக எமது நிறுவனம் ஒன்றை யாழ். ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்ற முகவரியில் ஆரம்பித்துள்ளோம்.*

*எனவே, வாடிக்கையாளர் எம்மைத் தொடர்பு கொண்டு தரமான இசைத்தட்டுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.*

பிரதான காரியாலயம்:
294, செட்டித்தெரு,
கொழும்பு 11.
T.P.: 0112334492, 0776438042

யாழில்:
ஆடியபாதம் றோட்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P.: 0773535288

(48372) (24-19-14)

**அழியா நினைவில் ஐந்தாண்டு**



அமரர்
செல்வரட்ணம் சுதர்சன்
(சுதன்)
உதிப்பு 23-06-1980 உதிர்வு 21-03-2001
*திதி: 26.03.2006*
துவாதசி
நீர் மட்டும் நிம்மதியில்!
நாம் எல்லாம் நிர்க்கதியில்!!

'சுதன் அகம்'
விக்னேஸ்வரா வீதி,
நிற்சாமம் - சங்கானை.

கண்ணீரில் கரையும்,
அப்பா, மம்மி,
சகோதரர்கள்:
உமா, சுசி, சர்மி, நிது.

(48363) (24)

**நெஞ்சகலா நினைவலைகள்**



திருமதி
**பரிமளகாந்தி நாகரட்ணம்**

அன்னைக்கும் அன்னையாய்
ஆருயிர்த் தந்தையாய் தன்னைக்
கரைத்து எமது உயர்வுக்காய்
தன்னை அர்பணித்த எம்
குலவிளக்கே நீங்கள் எம்மைப் பிரிந்து
ஐந்து ஆண்டும் ஆகிற்றோ!........

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

தர்மதேவி இராஜசுந்தரம்
(மகள்).

(சி.48446) (39-19-14-24)

# 200 கோடி ரூபா செலவில் இவ்வருடம் அக்கராயன்குளம் புனரமைக்கப்படும்

அக்கராயன், மார்ச் 21

'ஜெபிக்' திட்டத்தின் கீழ் அக்கராயன் குளம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கென கடந்தவருடம் 200 கோடியே 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டே புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட இருந்த போதும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த ஆண்டு இந்தப் பணிகள் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்திற்கு அடுத்த பெரியகுளமாக அக்கராயன்குளம் காணப்படுகிறது.

1958 ஆம் ஆண்டு வெட்டப்பட்ட இக் குளத்தின் கீழ் 3 ஆயிரம் ஏக்கர் வரையான நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டுவருகின்றது.

25 வருடத்திற்கு மேலாக இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்படாமலேயே உள்ளது.

இதனால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

இக்குளத்தின் அணைக்கட்டுச் சேதமடைந்து காணப்படுவதுடன் எந்த நேரமும் உடைப்பெடுக்கக்கூடிய அபாயமும் உள்ளது.

இவ்வருடமாவது இந்தக் குளம் 'ஜெபிக்' திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப்படுமானால் இதன் மூலம் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-420-203)

## புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

பரந்தன்,மார்ச் 21

கரைச்சிக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைகளில் 100 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற 236 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் அபராயிதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஷ்ணன், கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்ஷிஸ் யோசப் அடிகளார் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் சிறப்புரை நிகழ்த்தினார். (த-352-203)



நாச்சிக்குடாக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு பூநகரி -'முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினர் அண்மையில் நுளம்பு வலைகளை வழங்கினர். அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (த-415)

## அக்கராயன் ஆஸ்பத்திரி வீதி நிகொட் திட்டத்தில் புனரமைப்பு

அக்கராயன்,மார்ச் 21

கிளிநொச்சி, அக்கராயன் மருத்துவமனை வீதி புனரமைக்கப்பட்டுவருகிறது.

அம்பலப் பெருமாள் சந்தியிலிருந்து அக்கராயன் பிள்ளையார் கோயில் வரையான வீதியே திருத்தப்படுகிறது.

இவ்வீதி திருத்தப்படுவதால் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் பாதுகாப்பாகப் போக்குவரத்துச் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் அக்கராயன் சுற்றயல் கூறு மருத்துவமனையில் மகப்பேற்று விடுதி, வெளிநோயாளர்கள் விடுதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

59 லட்சத்து 26 ஆயிரம் செலவில் இப்புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன். (த-420)

## நகை அடகுசேவை

கிராமிய அபிவிருத்தி வங்கியின் 14 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மூள்ளியவளைப் பிரதேச வங்கிக் கிளையில் கடந்த 14ஆம் திகதி முதல் நகை அடகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை கலந்துகொண்டு நகை அடகுச் சேவையை ஆரம்பித்துவைத்தார். (த-307)

## முல்லைத்தீவில் சிறப்புற நடைபெற்ற தையல்பயிற்சி நிறைவும் கண்காட்சியும்

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியின் நிறைவு விழாவும் கண்காட்சியும் அண்மையில் சிலாவத்தை கிராமத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பங்குத்தந்தை திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தையல் கண்காட்சி மண்டபத்தை சிலாவத்தை தமிழ் வித்தியாலய அதிபர் க.திருக்குமரன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து யேசு சபையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எவ்.எம்.அமலன், தமிழ்வித்தியாலய அதிபர் க.திருக்குமரன் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர்.

இதனையடுத்துத் தையல் பயிற்சியில் ஈடுபட்ட 32 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பயிற்சியாளர்களது பெயரில் வங்கிக் கணக்கில் ஒருதொகைப் பணம் வைப்பிடப்பட்டு அதற்கான கணக்குப் புத்தகங்களும் வழங்கப்பட்டன. (த-352-203)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரியாலை நாகபடுவான் கிராமத்தில் யு.என்.டி.பி.நிறுவன நிதி உதவியுடன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அமைக்கப்படும் பொதுநோக்கு மண்டபத்துக்கான அடிக்கல் நடும்விழா கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கரியாலை நாகபடுவான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி வி.பகீரதி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் அடிக்கல் நடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)




# வாகனச் சுத்திகரிப்பு நிலையக் கழிவுகளினால் கிளிநொச்சியில் நெற்பயிருக்கு அச்சுறுத்தல்!

அக்கராயன்,மார்ச் 21

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையங்களினால் பெருமளவு வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத அபாய நிலைதோன்றி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டம் தனி அலகாக யாழ். மாவட்டத்திலிருந்து பிரித்து விவசாய மாவட்டம் என்ற இலக்குடன் உருவாக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தனித்துவத்திற்கு இரணைமடு, அக்கராயன் போன்ற பல பெரியகுளங்களின் பங்கு முக்கியமாகவுள்ளது.

தமிழர் தாயகத்தின் நெற்களஞ்சியமான கிளிநொச்சி நகரில் இன்று நெற்செய்கைக்கு சுந்திகரிப்பு நிலையங்களும் கட்டடங்களும் பெரும் சவாலாக அமைந்துள்ளன.

இந்த விடயங்கள் பற்றிப் பார்பதற்கு முன்னர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குச் செல்வோம்.

1990 ஆம் ஆண்டு இரண்டாம் ஈழப் போர் தொடங்கிய ஆரம்ப நாள்களில் அரசின் கடும் பொருளாதாரத் தடைக்கு மத்தியில் நெற்செய்கையில் விவசாயிகள் காட்டிய தீவிரம் பட்டினிச் சாவுகளை இல்லாது ஒழித்தது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டலில் போர் நெருக்கடியான சூழலிலும் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டனர்.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரினை சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்த சிறிலங்காப் படையினர் கிளிநொச்சி நகரை முற்றாக அழித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், அக்கராயன், ஸ்கந்தபுரம், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்கீளில் இடம்பெயர்ந்து தங்கியிருந்தனர்.

1998 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரம் 'ஓயாத அலைகள் 2' நடவடிக்கை மூலம் புலிகளினால் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்தனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி நகரம் எழுச்சி பெற்று வருகின்றபோது விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி நகரில் போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் அமைக்கப்பட்டுள்ள பெருமளவு சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவு எண்ணெய்கள், டீசல் ஓயில் என்பன வயல் செய்கையை பாதிப்பனவாக உள்ளன.

இதனால் தமது வயல் செய்கையில் உரிய பலனை அடைய முடியவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் வயல்களுக்குச் செல்லும் நீர் வாய்க்கால்களில் பெருமளவு வாகனங்கள் கழுவப்படுவதினால் நெற்செய்கை பாதிப்புக்குள்ளாகிவருவதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி நகரில் வயல் நிலங்களில் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படுவதைத் தடை செய்யுமாறு கிளிநொச்சி அரச அதிபர் கரைச்சி பிரதேச சபைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் தேவையற்ற இடங்களில் கட்டடங்கள் அமைப்பதையும் அதன் மூலம் சூழல் பாதிக்கப்படுவதையும் தடுப்பதில் அக்கறை செலுத்திவருகிறது.

தற்போது கிளிநொச்சி நகரில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் பற்றியும் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுமிடத்து விவசாயிகளை பாதிப்பிலிருந்து தடுக்கலாம் என்று பல தரப்பினரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

விவசாயச் செய்கைக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டால்தான் தமிழர் தாயகத்தில் தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க முடியும் என்றும் கருத்துக் கூறப்பட்டது. (த-420)

## தவக்காலச் சிந்தனை 21

### மன்னித்து வாழ்ந்து மாண்புறுவோம்

மனிதர்களது தேவைகள் பல்கிப் பெருகிக்கொண்டே செல்கிறது. அவனது அடிப்படைத் தேவைகளை நிவர்தி செய்து கொள்ள ஓடி, ஓடி உழைத்து ஆயுள் தோறும் போராடுவதே முக்கியமான சவாலாகிவிட்டது. வாழ்கை பயமும், துயரும், அச்சமும், அவஸ்தையும் நிரம்பியதே என்ற மன அச்சத்தை உண்டு பண்ணுகின்றது. சுமையும், சோகமும், முரண்பாடுகளும் ததும்பிய இவ் வாழ்வை எவ்வாறு மகிழ்சியாகவும், மன நிறைவுள்ளதாகவும் மாற்றி அமைப்பது என்பதே இன்று பிரதான விடயம்.

யுத்தம், இடப்பெயர்வு, வெள்ளம், வறட்சி, நோய்கள் இவற்றுக்கு முகம் கொள்ளவும் நாம் ஆயத்தமாகிக் கொள்ளவேண்டும். மன்னிப்பு வழங்குவது மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டது. மன்னிப்பு வழங்குவது கடினம் என்ற நிலை மாறவேண்டும். மன்னிப்பு வழங்குவதை இன்றைய இறைவார்த்தையில் யேசு ஒரு கதையாக கூறுவதை நாம் (மத்தேயு 18: 21-35) காண்கின்றோம்.

எம்மை சிந்திக்க அழைப்பது மன்னித்து வாழ வேண்டும் என்பதையே. மன்னிப்பு கடவுளின் திருமுகம். அவரது இயல்பின்தன்மை அவரது இரக்கத்தின் வெளிப்பாட்டு இறைவன் நம்மை மன்னித்த முறைகளை அளக்க முடியுமா? அவர் காட்டிய அன்பையும் இரக்கத்தையும் நிறுக்க இயலுமா? கடவுள் சாயலாக பிறந்த மனிதர்களை மன்னிப்பதை அளக்க முடியாது. இறைவனின் இரக்கம் நம் இதயத்தின் வாயிலாக மன்னிப்பாக பாய்ந்து ஓடட்டும். சமூகத்தில் அயலவர் வாழ்வில் மன்னித்து மகிழ்ச்சியான சமுதாயம் மலரட்டும்.

ரி.சீதபொன்கலன்
ஆனைக்கோட்டை.

# நூல் அறிமுக விழா

மூத்த எழுத்தளர் 'கே.டானியல் படைப்புகள்' என்னும் நூல் அறிமுக விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூல் அறிமுகவுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தெணியான், கலாநிதி தகலாமணி பேராசிரியர், எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி செ.திருநாவுக்கரசு, க.தங்கவடிவேல் ஆகியோர் நிகழ்த்துவர். (3-202)

# விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்21

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில் திணைக்களத்தால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ள மின்னிணைப்பு, குழாயிணைப்பு பயிற்சி களுக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக் கப்பட்டுள்ளது.

தரம் 8 வரை கல்வி பயின்றவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்றும் விண்ணப் பப்படிவங்க ளைப் பிரதேச செயலகத் தில் பெற்றுக் கொள் ளலாம் என்றும் கர வெட்டி பிரதேச செய லர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (3-202)

# மட்டக்களப்பில் இளைஞர் கடத்தல்

மட்டக்களப்பு,மார்ச் 21

மட்டக்களப்பு- வாழைச்சேனையில் சிறிலங்காப் படையுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட இளைஞர் தர்மராஜன் (வயது 28) என தெரியவந்துள்ளது.

அண்மைய நாள்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் துணை இராணுவக் குழுக்களால் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் வாழைச்சேனை யூனியன் கொலனிக் கிராமத்தில் புகுந்த துணை இராணுவக் குழுவினர் மக்களின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் இளைஞர்களையும் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட அரசில் துறையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (3)




முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
License No : 50445
BS No : 5432:1996
License No : KM41240
ஏக முகவர்கள்
செண்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261 -5, 2337283 -5
பெக்ஸ்: 2446554
WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்
Access Graphics
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02.06.1961

மறைவு
23.03.1999

**அமரர் இரத்தினம் புனிதராசா (செல்வராசா)**

(சன்றைஸ் ரேடர்ஸ், சாவகச்சேரி)

திதி: சஷ்டி- 21.03.2006

பார்போற்றும் உத்தமராய்ப் பாரினிலே வாழ்ந்திரே!
விண்ணுலகம் தான் சேர்ந்து ஏழாண்டு ஆனதையா
எந்நாளும் உமை நினைத்தே இப்பூவுலகில் நாம் வாழ்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

அன்பு மனைவி, மக்கள், தாய்,தந்தை, சகோதரங்கள், மாமி, மச்சாள்மார், மச்சான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(48121) (89-11-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
08.05.1930

உதிர்வு
02.03.2005

**பெண்ணுத்துரை புஸ்பராணி**

பாசமுடன் எம்மை வளர்த்த அன்புத் தாயே!
தங்கள் அரவணைப்பில் நாம் வளர்ந்த
பசுமையான நாள்கள்- எம் உள்ளத்தில்
ஒன்றித்து எம் வாழ்நாள் பூராகவும் நிலைத்து நிற்கும் அம்மா!
என்றென்றும் நிலையான செல்வம் நீங்கள் தான் தாயே!
இன்று எம்முடன் நீங்கள் இல்லையே அம்மா!

39, சேமசுந்தரம் அவனியு,
யாழ்ப்பாணம்.

அம்மா உனது பிரிவால் துயருறும்:
மகன், மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(48817) (89-11-19)

## சிரமதானம்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் உற்சவத்தை யொட்டி ஆலய வாயில் பக்கம் மட்டுவில் பகுதி பொதுமக்களால் கடந்த சனி, ஞாயிறு சிரமதான அடிப் படை யில் துப்புரவு செய்யப் பட்டது.

இந்த சிரமதானப் பணி மட்டுவில் வடக்கு கிராம சேவை அலுவலர் க.வாமதேவன் தலைமையில் நடை பெற்றது. ஆலய முன் பக்க வளவு சுமார் 40 பரப்புக் காணி கனரக வாகனம் மற்றும் உழவு இயந்திரம் மூலம் துப்புரவு செய்யப் பட்டது. (3-31)

## நாய்களுக்கு தடுப்பூசிஏற்றல்

காரைநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்க ளுக்கு தடுப்பூசி மருந்துபோடும் தொடரில் இன்று காலை 9மணி தொடக்கம் 10.30 மணிவரை வியாவில் முன்பள்ளி நிலையத் திலும் 11மணி தொடக்கம் 12.30 மணிவரை கல்வந்தாழ்வு சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3மணி வரை நாகம்மாள் கோயிலடி யாழ்ரன் ஆரம்ப பாடசலைக்கு அண்மையிலும், நாளை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை பெரிய மணல் சன சமூக நிலையதிலும், 11 மணி தொடக்கம் 12.30மணி வரை பழைய கண்டி ஜே/47 இலக்க கிராம அலுவலர் அலுவலகத்திலும் பி.ப. 1.30 -3 மணிவரை புதுறோட் பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலகத்தில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும். (3-15)

## மணி விழாக் காணும் நாயகனுக்கு எமது வாழ்த்துக்கள்



21.03.2006 இல் மணிவிழாக்காணும் ஓய்வு பெற்ற
வடபிராந்திய இலங்கை வங்கி
உதவிப் பொது முகாமையாளர்

**திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்களை

**மனமார வாழ்த்துகின்றோம்**

சீர்பெற்ற கல்வியும் சாந்தமுள நல் நெறியும்
சொல்லும் செயலும் செகத்திலுயர் பண்பும்
சேர்ந்தே பணியதனில் முகாமைத்துவ உயர் நிலையும்
சேவைதனில் அறுபத்து அகவைதனில் ஓய்வு பெற்றே
ஈர்பத்து ஒன்றில் மணி விழாக் காண்புறும்
ஆண்டவனின் ஆசியினால் நாம் பெற்ற தந்தை
புகழும் இக்கணத்தில் "லோகவாசா" தலைமகனே
போக்கிசமாய் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.



(48208)(31-)

"லோகவாசா"
2ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

வாழ்த்துவோர்:
அன்பு மகன், மருமகள்,
பேரப்பிள்ளை, ஜெகசோதி
குடும்பம், சிவநாதன் குடும்பம்.

## ஒளிபடைத்த கண்ணும் உறுதி கொண்ட நெஞ்சும் மிக்க மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

(முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் ,இலங்கை வங்கி- வடபிராந்தியம்)

வங்கிச் சேவையில் நான்கு தசாப்தங்களிற்கு மேலாய்
உன்னத பணி புரிந்து வங்கியாளர்,
வாடிக்கையாளர் இதயங்களில் இமயமாய்
உயர்ந்து, மானிட விழுமியங்களின்
உறைவிடமாய்த் திகழ்ந்து மணி விழாக்காணும்
ஓய்வு பெற்ற எம் உதவிப் பொது முகாமையாளருக்கு
இந்நாளில் அவரின் புனிதப் பணி
தொடரத் தொடர வாழ்த்துக்களுடன்.

**இலங்கை வங்கி ஊழியர்கள். வட மாகாணம்.**

# கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டு: பற்றிமா றோ.கவுக்கு கூடுதல் இடங்கள்

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற பெருவிளையாட்டுக்களில் புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை அதிக இடங்களைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

கடந்த 15ஆம் திகதி தொடக்கம் கனகபுரம் மகாவித்தியாலயத்தில் கரபந்தாட்டம், பெண்களுக்கான எல்லே, பூப்பந்தாட்டம், கபடி ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. ஆண்களுக்கான எல்லே கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றிபெற்று மாகாண



மட்ட போட்டிகளில் பங்குபற்றத் தெரிவாகிய பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**கரபந்து**

15 வயதின் கீழ் - ஆண்கள் - புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை, கனகபுரம் ம.வி.

பெண்கள்:- புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை, பாரதி வித்தியாலயம்.

17 வயதின் கீழ் ஆண்கள்:- இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, வட்டக்கச்சி ம.வி.

பெண்கள்:- புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை, தருமபுரம் ம.வி.

19 வயதின் கீழ் - பெண்கள்:- பாரதி வித்தியாலயம், தருமபுரம் ம.வி.

**கபடி**

19 வயதின் கீழ் - ஆண்கள் - இராமநாதபுரம் ம.வி., பளை மத்திய கல்லூரி.

பெண்கள் - சிவநகர் அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம் ம.வி.

**எல்லே**

19வயதின் கீழ் - ஆண்கள் - தருமபுரம் ம.வி., கனகபுரம் ம.வி.

பெண்கள்:- கனகபுரம் ம.வி., சிவநகர் அ.த.க.பாடசாலை.

**பூப்பந்தாட்டம்**

ஆண்கள்:- கனகபுரம் ம.வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி.

பெண்கள்:- கனகபுரம் ம.வி., கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

(3- 405-86-202)

## எவரெடி சுற்றுப் போட்டி பருத்தித்துறை லீக் வெற்றி

இலங்கை.உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் எவரெடி வெற்றி கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் - 19 வயதுப் பிரிவினருக்கான - உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் பருத்தித்துறை லீக் அணி வெற்றிபெற்றது.

பருத்தித்துறை லீக் அணி எதிர்த்து மன்னார் மாவட்ட லீக் அணி மோதியது.

பருத்தித்துறை லீக் அணி... எதிர்த்து விளையாடிய மன்னார் மாவட்ட லீக் அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எம்.பி. பார்சூக், எம்.பிரான்சிஸ், அ.கொமின் ஆகியோர் கடமையாற்றினர். (3-190)



நல்லூர் பிரதேச செயலக எல்லே இறுதி ஆட்டப் போட்டியில் சில கட்டங்கள்...

(படங்கள்: நேசன்)

# பொதுத்தேர்தல் ஒன்று இப்போதைக்கு நடைபெறாது மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசுக்கு உண்டு

## அடித்துச் சொல்கிறார் பிரதி அமைச்சர் டிலான்

கொழும்பு, மார்ச் 21

ஜே.வி.பியினர் அரசைவிட்டு விலகப் போகிறார்கள் என்றும் - அவர்கள் விலகினால் நாடாளுமன்றில் அரசுக்கு ஏற்படும் பெரும்பான்மைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலையடுத்து நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்றும் கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை.

ஜே.வி.பியினர் இப்போதுகூட அரசுடன் இல்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் போது அவர்கள் அரசை விட்டு விலகிவிட்டார்கள். உண்மையில் அவர்கள் எதிரணியில் இருந்துதான் செயற்படுகிறார்கள். இவர்களை ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிந்ததும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு நிரூபிக்குமே தவிர நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட் டாது.

- இவ்வாறு பிரதி அமைச்சர் டிலான் பெரேரா 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கையில் முரண்பட்டு நிற்கின்ற ஜே.வி.பியினர் அரசைவிட்டு விலகுவர் என்றும் - அவ்வாறு விலகும் பட்சத்தில் நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை நிராகரிக்க நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும் - இது தொடர்பாக ஜனாதிபதி பரிசீலனை செய்து வருகின்றார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே பிரதி அமைச்சர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பியினர் அரசைவிட்டு விலகத் தீர்மானித்துள்ளனர் என்றும், அதனால் நாடாளுமன்றில் ஏற்படும் பெரும்பான்மைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்குமே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், தமீழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு (பொதுக்கட்டமைப்பு) கைச்சாத்திடப்பட்டபோதே அதை எதிர்த்து ஜே.வி.பியினர் அரசை விட்டு விலகி விட்டனர்.

அதன் பின்னர் அவர்கள் அரசுடன் இணையவில்லை. அரசுக்கு வெளியே எதிர்க்கட்சி போல் இருந்துகொண்டுதான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவை வழங்கினர். அதே போல் எதிர்ப்பையும் வழங்கினர்.

அவர்கள் அரசைவிட்டுப் புதிதாக விலகப் போவதில்லை; என்றோ விலகிவிட்டார்கள். இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் எமக்குப் பெரும்பான்மையை நிரூபிக்கும் பிரச்சினைவராது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையடுத்து நாம் நிச்சயம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நிரூபிப்போம். அதற்கு ஏதுவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சியினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் இணையவுள்ளனர்.

அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அரசு முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கை காரணமாக எம்முடன் இணைவர் என நாம் எதிர்பார்க்கிறோம்.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலையடுத்து அரசு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நிரூபிப்பது இப்போதே உறுதியாகிவிட்டது.

அரசிற்குச் சாதகமான இந்த நிலையில் நாடாளுமன்றத்தை மீண்டும் கலைத்து மக்களுக்குச் சுமையேற்றும் ஒரு கட்டாய தேவை அரசிற்கு இல்லை. அடுத்த நான்கு வருடங்களுக்கு நாடாளுமன்றம் கலைக்கப்படவே மாட்டாது.

- எனக் கூறினார். (க - 3)

## யாழ். இயல்புநிலை குறித்து அமைச்சர் டக்ளஸ் பேச்சு

பாதுகாப்புத் தரப்பினரால் யாழ். மாவட்ட மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படும் வகையில் ஒரு சில நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என ஒரு சிலர் தமது அவதானத்துக்குக் கொண்டுவந்துள்ளனர் எனவும் இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினரின் உயர்மட்ட அதிகாரிகளுடன் தாம் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார் எனவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட மக்களின் இயல்பு நிலையை உறுதிப்படுத்துவதற்கு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (கீ-3)

## துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் தெரணியாகல பகுதியில் கைது

கொழும்பு, மார்ச் 21

அவிசாவளை தெரணியாகலப் பகுதியில் ரி.56 ரக துப்பாக்கியொன்றை வைத்திருந்த நபரை தெரணியாகல பொலீஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். இத்துப்பாக்கியை சந்தேகநபர் வீட்டினுள் புதைத்து வைத்துள்ளார் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். கைதுசெய்யப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, களனிப் பகுதியில் நபரொருவரின் வீட்டினுள் இராணுவச் சிப்பாய்களின் ஒரு தொகைக் காலணிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என களனிப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர், தாம் இராணுவச் சிப்பாய்களுக்குக் காலணிகள் உற்பத்தி செய்து விநியோகிப்பதாகப் பொலீஸாருக்குத் தெரிவித்திருக்கின்றார். (க-3)

## வடக்கு - கிழக்கு ஆளுநர் திருகோணமலைக்கு விஜயம்

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மெஹான் விஜேயவர்த்தன நேற்றுமுன்தினம் திருமலை தோப்பூருக்கு விஜயம் செய்தார்.

தோப்பூர் கிராமிய வைத்தியசாலை குறைபாடு தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டார். கூட்டம் டாக்டர் எ.சீ. எம். சமீம் தலைமையில் நடைபெற்றது.

குறைபாடுகள் குறித்து முழுமையாக அறிந்துகொண்ட அவர் இந்த வைத்தியசாலையை தரம் உயர்த்தி, சகல பௌதிகவள மற்றும் ஆளணிக் குறைபாடுகளை தீர்த்து வைப்பார் என உறுதியளித்துள்ளார். (க-3)

# வடக்கு - கிழக்கில் தேர்தலை பிற்போடுக! மறுப்பின் விளைவு பாரதூரமாக மாறும்

## நல்லூர் பிரதேசசபை வேட்பாளர் கருத்து

வடக்கு - கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையை செவிமடுக்காத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படையினரின் வேண்டுகோளுக்கமைய குறித்த தினத்தில் தேர்தலை நடத்த ஒத்துழைப்பாராயின் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக அமையும். அதனை ஜனாதிபதியாலோ, படையினராலோ எதிர்கொள்வது கடினமான காரியமாகும்.

- இவ்வாறு நல்லூர் பிரதேச சபைக்கான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான சுகந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடுமாறு கேட்டனர். இதனை செவிமடுக்காத ஜனாதிபதி யாழிலுள்ள படையினரின் வேண்டுகோளுக்கமைய தேர்தலைக் குறித்த தினத்தில் நடத்த ஒத்துழைப்பு வழங்குவர் எனத் தெரியவந்துள்ளது.

இதிலிருந்து யாழில் படையினரின் அத்துமீறல்கள், சிவில் நடவடிக்கையால் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை சர்வதேச சமூகம் உணரவேண்டும். வடக்கில் தனியான இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதென்பதை பல தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. அதனையும் மீறி படையினரின் வேண்டுகோளுக்கமைய தேர்தல் நடந்தால் மக்கள் கிளர்ந்தெழும் சாத்தியம் உண்டு - என்றார் சுகந்தன். (க-3)

# இலங்கை-இந்திய உறவை வலுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## இந்திய சபாநாயகர் கருத்து

கொழும்பு,மார்ச் 21

இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளையும் பலப்படுத்துவதுடன் இரு நாடுகளுக்கிடையிலான பொதுவான சிக்கல்களும் பகிர்ந்தளிக்கப்பட்டு தீர்க்கப்படும்.

- என இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

சோம்நாத் சட்டர்ஜியை - இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் சி.ஆர். ஜயசிங்க, டெல்லியில் வைத்து சந்தித்தபோதே சட்டர்ஜி இதனைத் தெரிவித்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும், அவர்களுக்கிடையிலான சந்திப்புகள் மூலமாகவும் - இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தி பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள - சபாநாயகர் லொக்கு பண்டாரவின் அழைப்பை ஏற்று - சோம்நாத் சட்டர்ஜி இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-3)

## சேவைநலன் பாராட்டு

**திருமதி நாகம்மா மகாலிங்கம்**

21-03-2006



அகவை அறுபதில் ஓய்வுபெறும் எமது கல்லூரி கலாவித்தகர் மா.நாகம்மா! நீவிர் மாண்புறு மனநலத்துடன் உடல் நலமும் பெற்றாங்கு பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்,
**யா/செங்குந்த இந்துக் கல்லூரி.**

(48355) (39-11-14)

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 24 - 11 - 1967

ஆண்டவன் அடியில் 21 - 03 - 1989



**தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா**

மல்லாகம். (C/48447)(51-19-11) -குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



**சு.கணபதிப்பிள்ளை**
*(இளைப்பாறிய ஆசிரியர்)*



**க.சிவபாதசுந்தரம்**
*(இளைப்பாறிய அதிபர்)*

எம் அன்புத் தெய்வங்களுக்கு இதய அஞ்சலிகள்

சு.க.சண்முகசுந்தரம்,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தொ.பே.: 077-6450705

குடும்பத்தினர்.

(48356) (39-11-14)

## தேவை

எமது நிறுவனத்தில் வேலை செய்வதற்கு கூலியாள்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
ஒஸ்மானியா கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021-4590008

(48360) (39-11-14)


## "DADI"
வோட்டர் பம்ப்



சேன்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
324 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 112334261, பெக்ஸ் 112448654

நாராயண கட்டிடப் பொருட்கள் வர்த்தகர், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## யாழ். பிரதேச முன்பள்ளிகளில் பேச்சுத்திறன் காண் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் யாழ். பிரதேச முன்பள்ளிகளின் பேச்சுத்திறன் காண் வைபவம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த வைபவம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை ஜ.பி.தயாபரன், கலாநிதி சைவப் புலவர் வ.கந்தசாமி, பாலர் கல்விக் கழகச் செயலாளர் திருமதி தெ. இரட்ணகோபால் ஆகியோர் கலந்துகொள்வர். (த-202)

## சுயதொழில் விரும்பும் பெண்களை பதிவுசெய்யக் கோரிக்கை

தேவைநாடும் மகளிர் அமைப்பு (வின்) தனித்து குடுமபத்தைத் தலைமை தாங்கும் 50 வயதிற்குட்பட்ட சுயதொழில் செய்ய விரும்பும் பெண்களைப் பதிவுசெய்துவருகின்றது. பதிவு செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் தேவை நாடும் மகளிர் அமைப்பு, 22/1, றக்கா லேன், சுண்டிக்குளி என்னுப் முகவரியில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிறுவனத்தின் இணை இணைப்பாளர் ப.கிருபா கேட்டுள்ளார். (த-202)

# மரண அறிவித்தல்கள்

## நல்லப்பா செல்வநாதன்

*(முன்னாள் உரிமையாளர்- சிறி சாயி ஸ்ரோர்ஸ், யாழ். நவீன சந்தை)*

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது **Toronto** வை வதிவிடமாகவும் கொண்டிருந்த நல்லப்பா செல்வநாதன் அவர்கள் 17.03.2006 வெள்ளிக்கிழமை **Toronto** இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லப்பா- சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ருக்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லையா (பரியாரியார்)- சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் மஞ்சுளா (**Canada**), புஸ்பதேவி (**France**) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாதன் (நேரு- கனடா), தேவராஜ் (ராஜன்- பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அனுஜ், கௌதம், வினோதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2006) புதன் கிழமை **Toronto** இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு:*
*416- 7244289*
*021-222-5534*

(48354)(39-11-14)

*தகவல்:*
மக்கள், மருமக்கள், பெறாமக்கள்.

## சுப்பிரமணியம் தங்கவேல்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தங்கவேல் அவர்கள் 16.03.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- சிவக்கொழுந்து தம்பதியரின் தவப் புதல்வனும் காலஞ்சென்ற மருதர்- சொர்ணம் தம்பதியரின் மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, இரத்தினவேல் ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற செல்லச்சாமி, பூரணலட்சுமி ஆகியோரின் மைத்துனரும். சைலஜா, செல்வராஜ், வில்வராஜ், சிவராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும். பாலேந்திரதாஸன், ரஞ்சினி, கிருஷ்ண மாலா, கிருஷ்ண வதனி ஆகியோரின் அன்பு மாமனும். சஜீவன், மவிஸ்ரா, டசிகரன், டிலக்ஷன், சுவேதா, மதுமிதா, வர்ஷிகா, சைந்தவி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.03.2006) திங்கட்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது (தெணியம்பை) வல்வெட்டித்துறை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெணியம்பை,*
*யாழ் வீதி,*
*வல்வெட்டித்துறை,*

தொலைபேசி இலக்கம் .
077 3126828

*தகவல்:*
குடும்பத்தினர்.

(48358)(39-11-14)



# மரண அறிவித்தல்

## செபமாலை மரிய அருளானந்தம்

சாவகச்சேரி- கச்சாய் வீதியைச் சேர்ந்த செபமாலை மரிய அருளானந்தம் அவர்கள் 18.03.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை- அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் மரியறோஸ் அவர்களின் அன்புக் கணவரும் அருளாயி, மரியசெங்கோல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மரியபேனாட் **(J.P)**, மரியதாஸ் (கனடா), காலஞ்சென்ற மரிய அல்போன்ஸ் மற்றும் மரிய அருள்தாஸ் (கனடா), மரிய ஞானசீலன் (சுவிஸ்), மரியஅன்ரனி, மரிய யேசுதாசன் (இத்தாலி), மரிய பொன்கலன் (பிரான்ஸ்), மரிய நவசீலன் (இத்தாலி), மரிய அல்வீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரிய திரேசா, ஜோன்மரியா (கனடா), லதா (கனடா), சியாமளா (சுவிஸ்), மேரிபுளோரிடா, ரசீதா (இத்தாலி), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் மாமனும் ஜெகன், ஜெயந்தினி, வதனி, றமணி, தீபன், ரூபன், ரூபினி, ஜெனீபர், ஜோண், மீர்த்தி, செல்லா, யூலியா, அனு, வினு, யூட் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிங்கராசா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) மற்றும் தங்கம், மொனிக்கம்மா, தேவசகாயம்பிள்ளை (முன்னாள் உத்தியோகத்தர், இலங்கை வங்கி) ஆகியோரின் மைத்துனரும் அபிஷா, பூஜா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (21.03.2006) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு புனித லிகோரியார் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியின் பின் பூதவுடல் புனித லிகோரியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

புனித லிகோரியார் ஆலய அருகில்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

(48347) (39-11-14)

# இன்றைய நிலை நீடித்தால் ஈராக்கில் வெற்றி நிச்சயம்!

## படையெடுப்பின் 3ஆம் ஆண்டை ஒட்டி புஷ் மதிப்பீடு

வாஷிங்ரன்,மார்ச் 21

ஈராக் மீது அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மேற்கொண்ட போர் எடுப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் விடுத்த மதீப்பீட்டு அறிக்கையில் இப்போதைய நிலைப்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்படுமானால் அது வெற்றியில் கொண்டுபோய் விடும். அத்துடன் பல சந்ததியினருக்கு ஈராக்கை பாதுகாத்துக் கொடுப்பதாவும் இருக்கும் என்று கூறியுள்ளார்.

ஈராக்கில் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டி எழுப்ப முனைந்திருப்பதாகக் கிடைத்துள்ள செய்தி தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகக் கூறியுள்ள அதிபர், அவர்களை தீவிரமான முயற்சியில் ஈடுபடும்படியும் வற்புறுத்தியுள்ளார்.

ஈராக்கில் முன்னாள் இடைக்காலப் பிரதமர் இயாத் அலவி, ஈராக்கில் நிலைமைகள் உள்நாட்டு யுத்தம் ஒன்றை தோற்றுவிக்கும் நிலைக்கு வந்துள்ளதாகக் கூறியுள்ள கருத்துக்கு அதிபர் புஷ்ஷின் கருத்து முரண்படுவதாக உள்ளது.

ஈராக் பல கூறுகளாகப் பிரிந்து போகக் கூடும். ஆனால் இன்னும் அந்த மீளவும் திரும்பமுடியாத நிலைக்கு போய்விடவில்லை யென்று அலவி தெரிவித்துள்ள கருத்து குறித்து அதிபர் புஷ் எதுவும் தெரிவிக்கவில்லை.

சிவில் யுத்தம் ஒன்றை எதிர்நோக்கும் நிலைக்கு ஈராக் சென்றுவிட்டதாகக் கூறப்படுவதை அமெரிக்காவும் பிரிட்டனும் மீண்டும் மீண்டும் மறுத்துவருகின்றன. ஆனால் அங்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள இனமோதல்களை வேறுவிதமாக விவரிக்கமுடியாது என்று அலவி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக்கிய அதிபர் ஜலால் தலபானி கூறுகையில் உள்நாட்டு யுத்தம் ஏற்படுவதற்கான நிலைமை இப்பொழுது பலவீனமுற்றுள்ளது என்றார்.

அரசியல் குழுக்களுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. தேசிய அரசு ஒன்றை உருவாக்க முயற்சி நடைபெறுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

ஈராக் மீதான படையெடுப்பு தொடர்பாக அதிபர் புஷ் விடுத்துள்ள செய்தியில் அமெரிக்கப் படையினரைப் பாராட்டத் தவறவில்லை.

ஈராக்கை விடுவிப்பதற்கான போரின் மூன்றாம் ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க மக்கள் சீருடை அணிந்துள்ள எமது ஆண் பெண்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கின்றோம். அவர்களுக்கு ஆதரவாகவிருக்கும் குடும்பங்களுக்கும் நன்றி தெரிவிக்கவேண்டும் என்றார் அதிபர் புஷ்.



அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ரம்ஸ்பீல்ட் ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை திருப்பி அழைப்பது பற்றிக் குறிப்பிடுகையில் ஈராக்கை விடுத்து அமெரிக்கப் படைகள் இந்தக் கட்டத்தில் வெளியேறுவதென்பது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியை சர்வதிகாரி ஹிட்லரின் ஆதரவாளர்களிடம் கையளித்தது போல் ஆகிவிடும் என்றார். (ப)

## டில்லியில் மூன்று தீவிரவாதிகள் கைது!

புதுடில்லி,மார்ச் 21

பஞ்சாப் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் மூன்று நபர்களை டில்லி பொலீஸார் நேற்றுக் காலை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் 'பப்பர் கால்சா' என்ற பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஜக்தார் சிங் ஹவாராவின் நெருங்கிய கூட்டாளிகள் என்று கருதப்படுகிறது.

இவர்களிமிருந்து நான்கு கிலோ 'ஆர்.டி.எக்ஸ் ரக வெடிமருந்து, கையெறி குண்டுகள், பிஸ்டல்கள் முதலியன கைப்பற்றப்பட்டன. (ஐ)

## 100 வயதைத் தாண்டியோர் சீனத் தலைநகரில் 300 பேர்!

பெய்ஜிங்,மார்ச் 21

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நூறு வயதைக் கடந்து வசிப்போரின் எண்ணிக்கை 304 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு முடிவில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளது.

2003 ஆம் ஆண்டின் முடிவில் கணக்கெடுக்கப்பட்ட போது இது 257 ஆக இருந்தது.

304 பேரில் 226 பேர் பெண்கள். சீனாவில் சயாயோங் மாவட்டத்தில் வசிக்கும் பெண்தான் மிகவும் வயதானவர். அவரது வயது 110.

பெய்ஜிங் நகரில் 65 வயதுக்கு மேல் வசித்து வருவோரின் எண்ணிக்கை 16.6 லட்சம்.

இது பெய்ஜிங்கின் மொத்த மக்கள் தொகையான 1.53 கோடியில் 10 சதவீதம். (ஐ)

## உலக அரங்கில்

### கன்னியாகுமரியில் நிலநடுக்கம்

நாகர்கோயில்,மார்ச் 21

கன்னியாகுமரியைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. பல வீடுகளில் விரிசல் விழுந்தது. இதனால் மக்கள் பீதியடைந்து வீடுகளைவிட்டு வெளியேறினர்.

சுமார் 20.கி.மீ. சுற்றளவுக்கு மாலை 6.50 மணிக்கும் பின்னர் இரவு 7 மணிக்கும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்டபோது, அழகப்பபுரம் அருகேயுள்ள தெற்கு கருங்குளத்தில் உள்ள ஒரு கல்குவாரியில் தரையில் இருந்து கரும் புகையும், தீக்கனலும் வெளியானதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

## ஒப்பந்தத் தொழிலாளர் முறையை எதிர்த்து பிரான்ஸ் முழுவதும் 15 லட்சம் பேர் பேரணி!

பாரிஸ்,மார்ச் 21

பிரான்ஸ் அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிலாளர்கள் சனிக்கிழமை நாடு முழுவதிலும் ஊர்வலங்கள், போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த ஊர்வலத்தைக் கலைக்கப் பொலீஸார் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தனர். இதில் 5 பொலீஸ் அதிகாரிகள் உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இடம்பெற்ற ஊர்வலத்தில் பல லட்சம் பேர் பங்கேற்றனர். நாடு முழுவதிலும் நடந்த ஊர்வலத்தில் 15 லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

26 வயதுக்குக் குறைந்தோரை வேலைக்கு அமர்த்தி எந்தவித விளக்கமும் கேட்காமல் வேலையிலிருந்து நீக்கலாம் என்ற அரசின் புதிய அறிவிப்பை பிரான்ஸ் அரசு வெளியிட்டிருந்தது. (ஐ)

## வடக்கு பாகிஸ்தானில் குண்டுவெடிப்பில் 4 பேர் பலி!

இஸ்லாமாபாத்,மார்ச் 21

வடக்கு பாகிஸ்தானில் வீதியோர குண்டு வெடிப்பொன்றின் காரணமாக குறைந்தது ஏழு பேர் பலியாகியுள்ளனர்.

வடமேற்கு பாகிஸ்தானிலுள்ள டெரா இஸ்மாயில் கான் என்ற நகரில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

வீதியோரத்தில் வெடிக்கவைக்கப்பட்ட இக்குண்டினால் வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் 'வான்' ஒன்று தாக்குதலுக்குள்ளானது. மூன்று பொலீஸார் கொல்லப்பட்டனர். மூன்று துணைப்படையினரும் பாதசாரி ஒருவரும் கொல்லப்பட்டனர்.

அது தூரத்திலிருந்து இயக்கப்பட்ட ஒரு குண்டுவெடிப்பு என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வீதியில் நின்ற நான்கு பொது மனிதர்களும் காயமடைந்துள்ளனர்.

பொலீஸ் வாகனம் மிக மோசமாகப் சேதமடைந்துள்ளது. சம்பவத்துக்கு இதுவரை எவரும் உரிமைகோரவில்லை யென்று பொலீஸார் கூறினர். (ப)

# அ.தி.மு.க. கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம்

## தமிழக பொலீஸ் உளவுத்துறை கருத்துக்கணிப்பு

சென்னை, மார்ச் 21

தமிழ் நாட்டில் அ.தி.மு.க. கூட்டணிக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் என்று தமிழக பொலீஸில் உளவுத்துறை தயாரித்த கருத்துக் கணிப்பு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது

'கருத்துக்கணிப்பு' விவகாரத்தில், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது தமிழக பொலீஸின் உளவுத்துறை. அ.தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு நன்றாக உள்ளது' என உளவுத் துறையினர் தயாரித்த, கருத்துக்கணிப்பின் ரகசிய அறிக்கையே இதற்கு காரணம். சர்ச்சைக்குரிய இந்த அறிக்கை எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக 'தினமலர்' பத்திரிகை தெரிவித்திருப்பதாவது:-

தமிழக பொலீஸில் ஓர் அங்கமாக செயற்படுகிறது உளவுத்துறைப் பிரிவு. எந்த ஆட்சி இருந்தாலும் அரசியல் ரீதியான குற்றச்சாட்டு, விமர்சனங்களுக்கு இந்தப் பிரிவு ஆளாகும். தி.மு.க. ஆட்சி காலத்தில் அ.தி.மு.கவை உடைக்க உளவுத் துறையைத் தான் கருணாநிதி முழுமையாகப் பயன்படுத்துவார். இப்போது அதேவேலையை அ.தி.மு.க. பயன்படுத்தும்போது தி.மு.கவுக்கு கோபம் அதிகரித்துள்ளது.

தி.மு.க. கூட்டணியில் உள்ள எல் லாக் கட்சிகளிலும் பிளவு ஏற்பட்டுவிட்டது. கடைசியாகக் கூட்டணியை உடைத்து, ம.தி.மு.கவை அ.தி.மு.க. பக்கம் சாய்க்கும் ரகசிய நடவடிக் கையில் ஈடுபட்டதாக உளவுத்துறை மீது ஆரம்பத்திலேயே தி.மு.க. குற்றம்சாட்டியது. தற்போது, அதற்கும் ஒரு படி மேலே போய், 'தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியே வெற்றி பெறும்' என்ற கருத்துக் கணிப்பை உளவுத்துறை தயாரித்து சில பத்திரிகைகளில் வெளியிடத் திட்டமிட்டிருப்பதாக பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

கூட்டணிப் பலம், தேர்தல் வாக்குறுதி, மக்கள் செல்வாக்கு, அரசு மீதான ஆதரவு அல்லது எதிர்ப்பு அலை ஆகிய சில காரணங்களே தேர்தலில் அரசியல் கட்சிகளின் வெற்றி. தோல்வியை நிர்ணயிக்கும் என்றிருந்த நிலை மாறி, உளவுத்துறையின் கருத்துக் கணிப்பும், ரகசிய நடவடிக்கைகளும் கூட 'தேர்தல் முடிவை' திசை திருப்பும் என்ற எண்ணம் மக்களிடையே விதைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம், சர்ச்சைக்குள்ளான தமிழக பொலீஸ் உளவுத்துறையின் கருத்துக் கணிப்பு.

கருணாநிதியின் கோபத்துக்கு ஆளாகியுள்ள, உளவுத்துறையின் கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்ட விதம் வருமாறு:-

✱ சட்டசபை தொகுதி வாரியாக நகர், புறநகர் பகுதிகள் தனித்தனியே பிரிக்கப்பட்டன. படித்தவர், கல்வியறிவு பெறாதோர், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுபான்மையினர், அரசு ஊழியர்கள், இளைஞர்கள், பெண்கள் என சகல தரப்பினரும் உள்ளடங்கிய ஆயிரம் பேரை கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தினர் உளவுத்துறையினர். இந்நடவடிக்கையில் மாநகர, மாவட்ட எஸ்.பி. சி.ஐ.டி. பொலீஸார் ஈடுபட்டனர்.

✱ கருத்துக் கணிப்பின் போது, முறையான படிவங்கள் ஏதும் மக்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாக, 'நீங்கள் யாருக்கு வாக்குப் போடுவீர்கள், என்ன காரணத்துக்காக அக்கட்சிக்கு வாக்குப் போடுகிறீர்கள், அரசு மீது அதிருப்தியாக இருக்கிறீர்களா?' என கேள்வி கேட்டு பதில் பெற்றனர். கருத்துத் தெரிவித்தோரின் விவரம் பதிவு செய்யப்படவில்லை. கருத்துக் கேட்கப்படும் ஆயிரம் பேரில் 500 பேர் பெண்களாக இருக்கவேண்டும் என்ற மேலிட உத்தரவு அப்படியே பின்பற்றப்பட்டது.

✱ அ.தி.மு.க., கூட்டணியில் ம.தி. மு.க. இணைந்தது பற்றி என்ன கருதுகிறீர்கள்? விஜயகாந்துக்கு ஆதரவு அளிப்பீர்களா? என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டன.

✱ ஆயிரம் பேரிடம் சேகரிக்கப்பட்ட கருத்து கட்சி வாரியாக சதவீத அடிப்படையில் பிரிக்கப்பட்டது. உதாரணமாக ஆயிரம் பேரில் 370 பேர் அ.தி.மு.க., கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்திருந்தால் 37 சதவீதமாக கணக்கிடப்பட்டது. இச்சதவீதத்தையே மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு மதிப்பிட்டனர்.

✱ அ.தி.மு.க.வுக்கு ஆதரவு அலை உள்ளதா, எதிர்ப்பு அலை நிலவுகிறதா, தமிழக அரசின் கடந்த கால நடவடிக்கை பற்றி அரசு ஊழியர்கள் என்ன கருதுகின்றனர், விவசாயிகள் என்ன கூறுகின்றனர் என பல கோணங்களிலும் கூடுதல் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இவ்வாறு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் முடிவுகள் உளவுப்பிரிவின் தலைமையிடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாநிலம் முழுவதும் இருந்து திரட்டப்பட்ட இந்த கருத்துக்கணிப்பின் அடிப்படையிலேயே, 'அ.தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு நன்றாக உள்ளது' என அறிக்கை தயாரித்தது உளவுத் துறை. இந்த அறிக்கையைக் கோடிட்டே தி.மு.க. தலைவர் கருணாநிதியும் பகிரங்கமாக குற்றம்சாட்டினார். (ஐ)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ் ⇆ கொழும்பு

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி வருகின்ற
*திரு.ம.மரியபேனார்ட் (J.P)* அவர்களதும்
எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்
*திரு.ம.மரிய அன்ரனி* அவர்களதும்
பாசமிகு தந்தை **செ.மரிய அருளானந்தம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை.**

(48375) (39-11-14)


**IIS CITY CAMPUS**

# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iiscc@sltnet.lk

**BIT**
Semester II & IV

**BIT கற்கைநெறிக்கான Semester II மற்றும் IV விரிவுரைகள் எதிர்வரும் 01.04.2006 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன**


# 15 ஆம் ஆண்டு நினைவுநாள்



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 17 - 02 - 1973 | 21 - 03 - 1991 |

**லெப். நேதாஜி**
**இரத்தினசிங்கம் மங்கலேஸ்வரன்**

இந் நாளில் வீரச்சாவடைந்த மாவீரரையும் நினைவு கூருகின்றோம்.

யாழ்.- நல்லூர். - குடும்பத்தினர்.

(48457)(39-11-15)


**IIS CITY CAMPUS**
Admissions For Academic Year 2006/2007

Date of Closing : 1st May 2006

Date of Selection Exam : 25th June 2006

IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iiscc@sltnet.lk

**BIT**
**Bachelor of Information Technology**
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான கல்வியாண்டு 2006/2007 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- விண்ணப்பதாரி 17 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த (உ.த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவ்வாண்டு க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் எமது நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

"Success Through Knowledge"


## சமய சந்நிதிகளில்...

சுழிபுரம், மார்ச்21

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய முதலாவது பொங்கல் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி எட்டாம் நாள் பொங்கல், வேள்வி என்பன நடைபெறும். (203-28)

உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகாகும் பாபிஷேகம் எதிர் வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (202)

## றோட்டறக்ட் கழகத்தின் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் பொது அறிவு, நுண்ணறிவு தேடல் பரீட்சையில் 10 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு-

க.அனுஷாந்த்(யாழ்.இந்துக் கல்லூரி), நி.சோபினி(வடமராட்சி மெதடிஸ் மகளிர் கல்லூரி), ச.பிரியனி(வடமராட்சி மெதடிஸ் மகளிர் கல்லூரி), த.கேமராஜி(பெரிய புலம் ம.வி.), ச.திவாகர் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ம.பரனிகா(யாழ். இந்து மகளிர் கல்லூரி), சி.விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செ. ஜிந்துஜன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வ.தயாளன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), த.தமிழினி (வடமராட்சி மகளிர் கல்லூரி). இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (த-202)

## குருநகரில் மகாஞான ஒடுக்கம்

குருநகர் பகுதியில் மகாஞான ஒடுக்க நிகழ்வு இம் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்று வருவதாக குருநகர் பங்குத் தந்தை வண. பிதா ஆர். எச்.சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார். இந்தஞான ஒடுக்க நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு யுவதிகளுக்கான கருத்தமர்வும் நாளை மறுதினம் 23ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப. 3 மணிக்கு இளைஞர்களுக்கான கருத்தமர்வும் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு தந்தையர்க் கான கருத்தமர்வும் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு முதியோர்க்கான கருத்தமர்வும் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-51)


**FASHION BEAUTY CORNER**



எமது நிறுவனத்தில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெறாதவர்கள் அனைவரும் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும்.

நிர்வாகி,
திருமதி ஜெயவாணி கஜேந்திரன்
இல. 14, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை அணைப்பில் 20-08-1950

ஆண்டவனின் அழைப்பில் 19-02-2006

## அமரர் தங்கராணி கந்தசாமி

உற்ற உறவுகள் யாவர்க்கும் தாயாக
இன்னல் நீக்கும் இனிய உறவானாய்
சுற்றம் சுருதி இழந்து தவிக்க - நீ
சுகமான தங்க ராகமானாய் தரணியிலே.

19.02.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி இன்று (21.03.2006) செவ்வாய்க்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பை ஏற்று சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'கலைமகள் வாசம்'
அல்வாய் வட மேற்கு,
அல்வாய்.
077 3618102

- குடும்பத்தினர்.

(48373) (39-11-15)





அறிமுகப்படுத்துகின்றோம் CN STEEL SLS 375 தரச்சான்றிதழுடன்

மார்ச் 31 வரை எமது விசேட அறிமுக விலைக்கு பெறலாம்

**CONFAB**
**STEEL (PRIVATE) LIMITED**
உலக வர்த்தக மையக் கட்டிடம், 05-09 கிழக்கு கோபுரம்,
எச்சிலன் சதுக்கம், கொழும்பு 01. இலங்கை
தொலைபேசி : 011-2394667 011-5634186/7
தொலைநகல் : 2394663
மின்னஞ்சல் : confabcro@sltnet.lk

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

**கதிர்காமு கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
கல்விசார ஊழியர்
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

(48379)
(18.17.49)

## கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

(ஆண்கள் - பெண்கள்)

1. தகைமைகள்: க.பொ.த (சா/த) சித்தி
2. வயது : 20 தொடக்கம் 55 வரை
3. உயரம்: 5'4"

குறிப்பு:

a) இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்களுக்கு முன்னுரிமை.
b) நல்ல கண் பார்வையும், தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

4. சம்பளம்: ரூபா 6300/= (மாதமொன்று)

அத்துடன் 800/= வருகை ஊக்குவிப்பு மற்றும் EPF, ETF, ஊழியர் நஷ்ட ஈட்டுக் காப்புறுதி என்பனவும் வழங்கப்படும்

* நேர்முகப் பரீட்சை 25.03.2006 சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும். பின்வரும் சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்கவும்.

1. கிராம அதிகாரியின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதங்களுக்குட்பட்டது)
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3. தே.அ.அ., வி.அ.அ.
4. கல்விச் சான்றிதழ்

உண்மைப் பிரதியுடனும், சகலதினதும் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

இல. 337- 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-48602)
(18.17.49)
-பணிப்பாளர்.

'பெட்ஸோர்' படுக்கைப் புண்களா?

டயாபெட்டிக் அல்சரினால் ஏற்படும் புண்களினால் அவதிப்படுகின்றார்களா? எமது பெட்ஸோர் OR ஆயில் பூரண குணமளிக்கின்றது.

இலவச ஆலோசனை :
திங்கள் - வெள்ளி காலை 9.00 - மாலை 5.00
சனிக்கிழமை காலை 9.00 - பிப 2.00

FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
L5/ET/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 0094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
Website : www.fppvtl.org E-mail : fppvtl@lankabellnet.com
Available On Line
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company

## உங்கள் வியாபார தேவைகளுக்கு....

உங்கள் வியாபார நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கான Bill Control, Stock Control, Debtors Control, General Ledger, Payroll, Any Other Special Purpose Software போன்ற Software Programme கள் உத்தரவாதத்துடன் வடிவமைத்துத் தரப்படும்.

College of computer Studies
119, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
T.P.: 0777 279034

* எமது நிறுவனத்தில் கற்கை நெறிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை 25.03.2006 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்
CCS.

(சி-48452)(18-17-49)

TNI CENTRE
metropolitan
NAVAKALA

மெற்றோ பொலிற்றன் ஒப்பீஸ் பிறைவேற் லிமிட்டட்டும், நவகலா நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழ் செய்தி தகவல் மையம் நடக்கும்

## சதுரங்க போட்டி

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம் :01.04.2006 (சனிக்கிழமை) 02.04.2006(ஞாயிற்றுக்கிழமை)

பிரிவுகள் : 10, 12, 15, 19 வயதுக்குக் கீழ்
விண்ணப்ப முடிவு திகதி :- 29.03.2006
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: தமிழ் செய்தி தகவல் மையம்
180: பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 9545

குறிப்பு:-சகல மாணவர்களும் தத்தமது பாடசாலை ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

## நாகம்ஸ் சுன்னாகம்

ஜெயம்ரவி, காம்னா, பிரகாஷ்ராஜ்



**இதயத் திருடன்**

காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.00, 6.00, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இன்றுமுதல்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்
தங்கர் பச்சான், நவ்யா நாயர்
நடித்த
**சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி**


## மரண அறிவித்தல்

### மாரிமுத்து சத்தியரூபன் (சங்கானை)

பன்னாலை, நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, சங்கானையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சத்தியரூபன் நேற்று(20.03.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்து - சாவித்திரி தம்பதியரின் அன்பு மகனும் சத்தியசீலன், சத்தியஜீவன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று(21.03.2006)செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா.சத்தியசீலன்
குடும்பத்தினர்.

பிரதான வீதி,
சங்கானை.
(C-48604)
(18-12-49)


## வேலை ஆள்கள் தேவை

* சப்ளையர்ஸ்
* பார்சல் கட்டுபவர்
* ரீ மேக்கர்

தொடர்பு:
**திறீ ஸ்டார் ஹோட்டல்**
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 7125 , 222 3817

(c-48605)(18.12.49)


## கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் லீக் முறையிலான ஆண்,பெண் பிரிவினருக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பிற்பகல்
3.30 மணி
பெண்கள்பிரிவு
பமிலியன்ஸ் (சிவப்பு) வி.க எதிர் கோப்பாய் வி.க.

பிற்பகல்
4.30 மணி
ஆண்கள் பிரிவு
சென்றலைஸ் (சொக்ஸ்) வி.க எதிர் உடுவில் வி.க.

(எ-190)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமார் துஸ்யந்தி (சுதா)



யாழ்ப்பாணம், அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமார் துஸ்யந்தி (சுதா) பிரான்ஸில் நேற்று(20.03.2006)திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அம்மன் வீதி, கந்தர்மடம் இல.2A, ஐ வசிப்பிடமாகக் கொண்ட யோகராஜா, மகேந்திரராணி (இந்திரா) தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், திரு.திருமதி இரத்தினத்தின் அன்பு மருமகளும் குமாரின் (விசு) அருமை மனைவியும் சிந்துஜா, மிதுலா விதுசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தி (இந்தியா), சாந்தி (இத்தாலி), ஜெயந்தி (யாழ்ப்பாணம்), ரமேஸ் (லண்டன்), பிரசன்னா (கனடா), றமணா (இத்தாலி) ஆகியோரின் சகோதரியும் றெஜி (இந்தியா), தனேஸ்வரன் (இத்தாலி), ராஜன் (யாழ்ப்பாணம்), உமாகௌரி (கொழும்பு), கலைமகள் (மதி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.யோகராஜா
(தந்தை).

2A, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(48386)(18.12.49)

### நடராசா மணிவண்ணன் (மணியான்-கனடா)



நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மணிவண்ணன் (மணியான்) அவர்கள் 19.03.2006 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நடராசா-கிருஷ்ணவேணி தம்பதியரின் அன்பு மகனும் ஜெகநாதன்-கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெசிதாவின் அன்புக் கணவரும் ஜெனனி, ஜெனனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா
T.P:.416 667 1552
(48385)(18.12.49)

தகவல்:
திரு. திருமதி
குமாரசூரியர் -காந்திமலர்
42,பிரம்படி லேன்,கொக்குவில்.

### நாகலிங்கம் திவியம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அதிகாரி,நீர்ப்பாசனத் திணைக்களம்)

வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் திவியம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அதிகாரி,நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்கள் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுகிந்திரமணியின் அன்புக் கணவரும் திருமதி மைதிலி கணநாதன்,வைத்தியகலாநிதி நிஷந்தன் (ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை)ஆகியோரின் அன்புத் தந்தையும் கணநாதன் (HNB COLOMBO-I),திருமதி சுமித்திரா நிஷந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று,பூதவுடல் கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.நிஷந்தன்(மகன்).

(48377)(18-12-49)

### மாணிக்கம் பாலசிங்கம்

அல்வாய் வடக்கு, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த மாணிக்கம் பாலசிங்கம் அவர்கள் 19.03.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் திரு.திருமதி பொன்னர்- குஞ்சி தம்பதியரின் மருமகனும் தங்கம்மாவின்அன்புக் கணவரும் அன்னலிங்கம், திருமதி வல்லிபுரம் இரத்தினம், திருமதி தங்கராசா திரவியம், தர்மலிங்கம், திருமதி இராசதுரை பவள் ஆகியோரின் சகோதரனும் திருமதி தவேந்திரன் தவமலர், திருமதி செல்வராசமணி (சுவிஸ்), உருத்திரா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் தவேந்திரன் (ரவி), செல்வராசா (சுவிஸ்), உருத்திராசுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் ரவிசங்கர், அமுதா, ரவிதா, ரஞ்சித் (கனடா), யசிதா (சுவிஸ்), நிதுஷா (சுவிஸ்), நிவிதா (சுவிஸ்), சாருகா ஆகியோரின் பேரனும் லோஜிகா, சானுஜா ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர்அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

வீரபத்திரர் கோயிலடி,
அல்வாய் வடக்கு,அல்வாய்.
(48377)
(18-12-49)

### செல்லப்பா தம்பியையா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தம்பியையா அவர்கள் நேற்று(20.03.2006)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (U.K.), பொன்னுத்துரை, காலஞ்சென்ற பேரம்பலம், சோமசுந்தரம், காலஞ்சென்ற சிவயோகம்(U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுதர்சன், சுதானந்தன், சுதாக்ரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகிர்தா,அம்பிகா (ஆசிரியர் - கொழும்பு), விஜயதேவன்(ஆசிரியர் - இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் சுபாதன், சுதனிகா, மதியுகன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.03.2006)செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அழகம்மா(மனைவி),
சுதர்சன், சுதானந்தன்
(மகன்மார்),விஜயதேவன்
(மருமகன்).

சரவணபவானந்தா வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(48383)
(18-12-49)

# இளம்பரிதி - கண்காணிப்புக்குழு பளையில் நேற்று சந்தித்துப் பேச்சு

கிளிநொச்சி,மார்ச் 21

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட தலைவர் யோன், கண்காணிப்பாளர் கெய்டி, துணைக் கண்காணிப்பாளர் லாஸ்ப்ளைமன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை பளையில் உள்ள அரசியல் துறை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள போர்நிறுத்த மீறல்கள் மக்களது பாதிப்புகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது காணப்படும் நிலைமைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை, தப்பாட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் இயந்திரப் படகுகளில் இரவு நேரங்களில் கடலில் செல்வதற்கு சிறிலங்கா கடற்படையினரால் தடைவிதிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் வரணியில் வீதித் தடை உள்ளதால் இராணுவத்தினரது நிர்ப்பந்தம் காரணமாக வாகனங்களும், பாதசாரிகளும் தனியார் காணி ஊடாக பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் பயணிகளும் காணி உரிமையாளர்களும் பாதிக்கப் படுகின்றனர்.

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம் விஸ்தரிக்கப் படுகின்றது. அயலில் உள்ள தனியார் காணிகளின் பனை மரங்கள் தறிக்கப்பட்டு முகாமினையும் காவலரண்களையும் பலப்படுத்த அவை பாவிக்கப்படுகின்றன. முகாம் விஸ்தரிப்புக் காரணமாக அயலில் உள்ள மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

கொடிகாமம் - மிருசுவில் பகுதியில் மருத்துவ மனைக்கு முன்பாக உள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் படையினர் புதிதாக இராணுவ முகாம் அமைப்பதற் கான மரக் குற்றி களையும் மண்ணையும் இறக்கி முகாம் அமைக்க முயல்கின்றனர்.

சிறிலங்கா இராணுவ துணைக் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது மக்களுக்கு அச்சமூட்டுவதாகவே உள்ளது. உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் துணை இராணுவப் பொலீஸாரின் பாதுகாப்புடன் நடமாடுவது மக்களது வாக்களிப்புக்கு தடைகளை விளைவிக்கும் நோக்குக் கொண்டது.

ஈ.பி.டி.பி., வரதர் அணி ஆகிய துணை இராணுவக் குழுக்களே களவுகள் கொலைகளில் ஈடுபடுவதுடன் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினரும் குழு மோதல்களை ஊக்குவிப்பதாக ஆயுதங்களை வழங்கியுள்ளனர். இதனால் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வருகிறது. சிறிலங்காப் பொலீஸாரும் சிறிதளவும் அக்கறை காட்டுவதில்லை. இதனால் மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது. சிறிலங்காப் படையினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் மக்கள் மீதான நெருக்கு வாரங்களை ஏற்படுத்துவதானது பதற்ற நிலையைத் தணிக்காது அதிகரிப்பதற்கான உள்நோக்கம் கொண்டவை. சிறிலங்காப் படையினரதும் துணை இராணுவக் குழுவினரதும் இவ் வகைச் செயற்பாடுகள் சமாதான வழிமுறைகளுக்கு பெரும் இடர்களை விளைவிப்பதாகவும் எடுத்துக் காட்டியதுடன் மக்களது கௌரவமான பாதுகாப்புடனான அச்சமற்ற வாழ்வே இயல்பு வாழ்க்கையை உறுதிசெய்யும். எனவே இவ் வகையில் ஜெனீவா தீர்மானங்களும் போர்நிறுத்த உடன்படிக்கையும் நடைமுறைப்படுத்தப் படல் அவசியமாகின்றது என்று மேலும் தெரிவித்தார். (எ)

# இராணுவ சீருடையில் கொள்ளை நடத்திய ஆயுதக்குழுவினர் காத்தான்குடியில் கைது



காத்தான்குடி,மார்ச் 21

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசங்களில் இராணுவச் சீருடை அணிந்து வாகனக் கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த ஆயுதக்குழு பிடிபட்டது.

காத்தான்குடிப் பொலீஸார் அவர்களைக் கைது செய்துள்ளதுடன், பெருமளவு ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம். ஹேரத்தின் பணிப்புரையின் பேரில் சார்ஜன் ஏ.எம். எஸ். அப்துல் றஹீம் தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினர் நேற்று அதிகாலை மட்டக்களப்பு, சுவாமி விபுலானந்தா இசைநடனக் கல்லூரிக்கு முன்னால் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆயுதக்குழுவினரிடமிருந்து 27 - 56 ரக துப்பாக்கிகள், 19 எம்.எம். பிஸ்டல், ஒரு கிரனேட், ஒரு தொகை இராணுவச் சீருடைகள், 2 கையடக்கத் தொலைபேசி, ஒரு தங்க மாலை உட்பட பெருமளவு பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இக்குழுவினரால் கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், லொறி, வான்கள் என்பன கரடியனாறு புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (எ-க)

# செயற்றிறன் அரங்க இயக்கத்தின் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

செயற்றிறன் அரங்க இயக்கம் நடத்திவரும் மகிழ்வான கற்றல் செயற்பாட்டிற்கான சிறுவர் நாடக மேடையேற்றங்களின் தொடர்ச்சியாக நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 .30 மணிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு என்ற தலைப்பில் இரண்டாவது அமர்வுக்கருத்தரங்காக இது நடைபெறவுள்ளது. (எ-13)

# நோர்வேயை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரான வண. அம்பரஅமில தேரர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது :-

சர்வதேச அங்கீகாரத்துடன் இலங்கையின் இறையாண்மையை சீர்குலைக்கும் வகையில் தமிழீழத்தை - விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்கு நோர்வே சதிசெய்து வருகிறது. அதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

இராஜதந்திர உறவுகளுக்கான எல்லைகளை நோர்வே மீறிவிட்டது. நோர்வே தொடர்ந்தும் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டால் வெகுவிரைவில் தமிழீழம் விடுதலைப் புலிகளுக்குக்கிடைத்துவிடும். எனவே, நோர்வே அனுசரணையாளர்களை இனியும் இங்கு செயற்பட நாம் அனுமதிக்க மாட்டோம்.

நோர்வேக்கும் - இலங்கைக்குமான சகல உறவுகளும் துண்டிக்கப்பட வேண்டும். இதற்கென இன்று கொழும்பு விஹாரமாதேவிப் பூங்காவில் ஆரம்பமாகவுள்ள கண்டனப் பேரணி, நோர்வேத் தூதரகத்தை முற்றுகையிடவுள்ளது. இந்தப் பேரணிக்கு அனைத்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கங்களும், சக்திகளும் ஒத்துழைப்பு வழங்கி கலந்து கொள்ளவுள்ளன - என்றார் வண. அமில தேரர். (எ-க)

# பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய சில தமிழ்ப் பிரதேசங்களுக்கும் புலிகளின் அரசியல் போராளிகள் இவ்வாறு நாளை செல்வதற்குத் தயாராகி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (எ-க)

# சூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞனின் சடலத்தில் நீளமான காற்சட்டை அணிந்து காணப்பட்டது.

இச்சடலம் தமிழ் இளைஞன் ஒருவனுடையதாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது.

சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு விரைந்த மட்டக்களப்பு உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் எம். குமாரதுங்க தலைமையிலான பொலீஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-க-13)

# தேசிய அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு தெரிவித்தார். அரசுக்கு வழங்கும் ஆதரவை ஜே.வி.பி. விலக்க விருப்பதாகவும், அரசின் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் தக்கவைத்துக்கொள்வதற்காக தேர்தலை நடத்துவது குறித்து அல்லது தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து ஜனாதிபதி ஆலோசனை செய்து வருகிறார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பாகக் கருத்துக் கேட்டபோதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

சமாதான முயற்சிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஜே.வி.பியினர் அரசாங்கத்தை விட்டு விலகிவிடுவர் என்று கூறப்படுகிறது. அப்படியான நிலைமை ஏற்பட்டு அரசு தனது பெரும்பான்மையை நிலைநாட்ட முடியாவிட்டால் ஜனாதிபதி அரசைக் கலைத்துவிட வேண்டும். - என்றும் அவர் கூறினார். (எ-க)

# சந்திரிகாவுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புச் சலுகைககள்' என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்குச் செலவிடப்படுகிறது. இந்த வகையில் மனுதாரர்கள் செலுத்தும் வரி துஷ்பிரயோகம் செய்யப்படுவதால் மனுதாரர்கள் பாதிக்கப்படுவதோடு அவர்களது உரிமைகளும் மீறப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதிக்கு விசேட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி பலகோடி ரூபா பெறுமதியான - ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணமுடைய - காணி மாதிவெலவில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. 138 கமாண்டோக்கள், 50 இராணுவக் கமாண்டோக்கள் என 188 பாதுகாப்பு அதிகாரிகள் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டுள்ளனர். 34 அலுவலக ஊழியர்கள் அவருக்கு வழங்கப்பட்டு அது தற்போது 15 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அது தவிர 9 குண்டுதுளைக்காத வாகனங்கள் உட்பட 20 அரச வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் அவருக்கான செலவாக 2 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் 2கோடி 80 லட்சம் ரூபாவும் அதற்கடுத்த வருடம் 2 கோடி 90 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவிற்கு ஆக 70 லட்சம் ரூபாதான் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மேலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு மேற்படி காணியில் 90 கோடி ரூபாவிற்கு மாளிகை ஒன்று கட்டிக்கொடுக்கும் திட்டம் பிரேரிக்கப்பட்டு தற்போது கைவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அளவுக்கு அதிகமாக நிதியைச் செலவிட்டு மக்களின் வரிப்பணத்தை வீணாக்கக்கூடாது - என்று மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்த மனுக்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சரவை உறுப்பினர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய தரப்புகள் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டிருந்தன.

இடைக்கால உத்தரவை வழங்கிப் பணிப்புரை விடுத்த பிரதம நீதியரசர், மேற்படி மனுக்கள் தொடர்பாக எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பியும், அவர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்ததைச் சுட்டிக் காட்டினார்.

எனவே, பொதுநிதி தவறான - சட்டத்தை மீறிய - வகையில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்கும் கட்டாயம் உயர் நீதிமன்றத்திற்கு இருப்பதால், எதிர் மனுதாரர்கள் நீதிமன்றிற்குச் சமுகமளிக்காதபோது, நீதிமன்றம் தான் உகந்தது எனக் கருதும் இடைக்கால உத்தரவை விதிக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. - என்றும் பிரதம நீதியரசர் தெரிவித்தார். (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா தெட்சணாமூர்த்தி (பத்தர்)



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் இல.55, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா தென்சணாமூர்த்தி நேற்று (20.03.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நேசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசதுரை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னார் பாலசுந்தரம், பரமேஸ்வரி காலஞ்சென்ற றுக்குமணி, கணேசமூர்த்தி, புஸ்பராணி, இலட்சுமிகாந்தன் (சிறி - ஜேர்மன்), ஜெயராணி, மதிவானன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபாகரன், பாஸ்கரன் (சிவா), தயாகரன் (வவா), துரைராஜசிங்கம், தங்கராசா, ஞானேஸ்வரன், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் புவனேஸ்வரி, டெய்சிராணி (கிளி), மதிவதனி (திருகோணமலை), நகுலேஸ்வரி, மச்சேந்திரராணி, மதிவதனி ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2006) புதன்கிழமை நடைபெற்று, முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55 முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார் பண்ணை.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முருகர் ஆபிரகாம் கிருஷ்ணபிள்ளை



297/9, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகர் ஆபிரகாம் கிருஷ்ணபிள்ளை (கிட்ணு) அவர்கள் நேற்று (20.03.2006) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் சாராள் பார்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகர்-சின்னாச்சி தம்பதியின் அன்பு மகனும் உரும்பிராயைச் சேர்ந்த வைரமுத்து-நாகி தம்பதியரின் மருமகனும் ஜெயா (இத்தாலி), ரவி (வவுனியா), ராதா, ஜெனிற்ரா, விஜிஜேந்திரா (சுவிஸ்), கஜேந்திரா (ஆசிரியர்) ஆகியோரின் தந்தையும் சுலோஜினி, காச்சனா, இராஜேந்திரம், கிறிஸ்ரி, சர்வேஸ்வரன், ஜெயக்காந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (21.03.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

*இல.297/9, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பொன்னர் சின்னத்தம்பி (பண்டார நாயக்கா)

தென்மராட்சி வரணிப் பிறப்பிடமாகவும் கண்டாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சின்னத்தம்பி நேற்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*கண்டாவளை.*

தகவல்:
***சி.புவனேந்திரராசா - மகன்***
***(ஆசிரியர் - கிளி/நாகேந்திரபுரம் அ.த.க.பாடசாலை)***

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,

வெளியீடு 02

2006 ஏப்ரல்

## மாதிரி வினாப்பத்திரம்

## தமிழ்

மூன்று மணித்தியாலம்

திரு.K.ஈஸ்வரன் B.A (Hons), Dip.in.Edu - கொழும்பு

*முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ள வற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக் களுக்கு விடை எழுதுக.*

### பகுதி I

01) பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

(I) அருந்துயர் உழத்தலின் உண்மை சான்மென
பெரும் பிறிது இன்மையின் இலேனு மல்லேன்
*கரை பொருது இழிதரும் கான்யாற்று இருகரை*
*வேர்கிளர் மரா அத்து அந்தளிர் போல*
*நடுங்கல் ஆனா நெஞ்சமொடு இடும்பை*
*யாங்கனந் தாங்கு வென* மற்றே ஒங்கு செலல்
கடும் பகட்டு யானை நெமான் அஞ்சி
ஈர நெஞ்ச மோடிச்சேண் விளங்க
தேர் வீசு இருக்கை போல
மாரி இரீஇ மான்றன்றால் மழையே.

(II) குணநலம் சான்றோர் நலனே; பிற நலம்
ஏந்நலத்து உள்ளதுஉம் அன்று
கொல்லா நலத்தது நோன்மை; பிறர் தீமை
சொல்லா நலத்தது சால்பு
ஊழி பெயரினும் தாம்பெயரார் *சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படு வார்.*
கொடுப்பதூஉம் துய்ப்பதூாம் இல்லார்க்கு சுருக்கிய
கோடி உண்டாயினும் இல்.

(III) நிறையி னீங்கிய மகளீர் நீர்மையும்
பொறையினீங்கிய தவமும் பொங்கருள்
துறையினீங்கிய வறமுந் *தொல்லையோா*
*முறையினீங்கிய வரசின் முந்துமோ.*
பிறந்து நீயுடைப் பிரிவி றொல் பதம்
துறந்து மாதவந் தொடங்கு வாயென்றால்
மறந்து நீதியிற் றிறம்பி வாளிற் கொன்று
அறந்தின் றானென வரச தாள் வெனோ.

(IV) வீதிக் கதவை அடைப்பதுங் கீழ்த்திசை
விம்மிடும் சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தா் குரலும்
மழலை யழுங் குரலும்
ஏதெது கொண்டு வருகுது காற்று இவை
எண்ணிலகப்படுமோ?
*சீதக் கதிர் மதி மேற் சென்று பாய்ந்தாங்கு*
*தேனுண்ணு வாய் மனமே.* (24புள்ளிகள்)

02) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

தொழில்

அ) 1) இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்திரங்கள் வகுந்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே.

2) மண்ணெடுத்து குடங்கள் செய்வீரே
மரத்தை வெட்டி மனை செய்குவீரே
உண்ணக் காய்கனி தந்திடுவீரே
உழுது நன் செய்ப் பயிரிடுவீரே
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவீரே
இழையை நூற்று நல் லாடை செய்வீரே
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே.

3) பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே
பரத நாட்டியக் கூத்திடு வீரே
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப்பீரே
தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவிர் நீரே

i. இப்பாடல்களில் பாரதியார் தொழிலாளர்களையும் கலைஞர்களையும் நோக்கி எதை வேண்டுகிறார்?.
ii. "செய்யுந் தொழிலேதெய்வம்" என்ற கருத்து எவ்வாறு விளக்கப்படுகிறது.
iii. "இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே"
"உண்ணக் காய்கனி தந்திடுவீரே"
"பாட்டும் செய்யுளும் கோத்திடுவீரே"
என்ற பாடலடிகள் வாயிலாக விளிக்கப்படுபவர்கள் யாவர்?
iv. மூன்றாவது பாடலின் பின்நான்கு வரிகளும் உமது உள்ளத்தில் எத்தகைய மனப்பதிவினை ஏற்படுதுகின்றன?

அல்லது

அ) விஞ்ஞானி ஒருவன் உயிரோடு கூடிய ஓர் உடலைப் பிளக்கின்றான், பரிசோதனைகள் நடத்துகின்றான். உடலுக்குட்குடியிருந்த நுண்ணிய வாயுக்களைக் கண்ணாடிக் கூண்டுகளுள் அவனால் அடைத்தல் கூடும். உடலை இயக்கிக் கொண்டிருந்த உயிரை மாத்திரம் அவனால் பற்ற முடிவதில்லை. அதனாலே உடலுள் உயிரென்ற ஒரு பண்டம் இல்லையென்று கூடச் சொல்லுதற்குச் சிலர் முன் வரலாம். இலக்கியங்களுக்கோ. கவிதைக்கோ உயிர் இல்லையென்று மாத்திரம் யாருஞ் சொல்லுவதில்லை. இலக்கணங்களென்றும் நிகண்டுகள், அகராதிகளென்றும் பதவுரை, விஷேடஉரைகள். விமர்சனங்களென்றும் எத்தனையோ ஆயுதங்கள் இலக்கியங்களைக் கவிதைகளைப் பிளந்து உயிரைக் கண்டு பிடிப்பதற்குச் சேகரஞ்செய்யப்பட்டுள்ளன. இந்தப்பழைய புதிய ஆயுதங்களால் உயிரைப் பற்றுதற் பொருட்டு இலக்கியங்கள், கவிதைகள் சித்திரவதை செய்யப் பட்டுவருகின்றன. ஒரு கவிதையை எடுத்துக் கொண்டு அதனைத் தனித்தனி பதங்களாகப் பிரித்து ஒவ்வொரு பதத்துக்கும் நுண் பொருள் உரைத்து, அவ்வாறு உரைத்தற்கு வேறு வேறு நூல்களில் மேற்கோள்கள் காட்டி, இலக்கண வரம்புகளுங் கூட்டிப்பார்க்கிறார்கள். இந்தச் செயற்கருஞ் செயல்களால் கவிதை உயிர் தாங்காது இறந்து படுகின்றது. உயிரைப் பற்றுவது அரிதாகின்றது.
(பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை- இலக்கியவழி)

i. இலக்கியம், கவிதை என்பவற்றின் உயிரைக் கண்டுபிடிக்க எடுத்த முயற்சிகள் யாவை?
ii. கவிதைகள் உயிர்தாங்காது இறந்து விடக் காரணம் யாது?
iii. இலக்கியங்களும் கவிதைகளும் சித்திரவதை செய்யப்படுகின்றன என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
iv. "இலக்கியங்களுக்கோ, கவிதைகளுக்கோ உயிர் இல்லை என்று யாருஞ் சொல்லி விடுவதில்லை" இக் கூற்றுப் பற்றி உமது கருத்து வெளிப்பாடு யாது? (16புள்ளிகள்)

### பகுதி II

3) 'நாண் உடைமை' என்னும் அதிகாரத்திலே திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.
அ) நன்மக்களுக்கு நாணமானது எத்தகைய சிறப்பைத் தரும்?
ஆ) நாணமதை உயர்வாகக் கருதுவோர் அடையும் பயன் யாது?
இ) உயிரை விட நாணம் மேலானது என்பதை வள்ளுவர் எவ்வாறு கூறுகின்றார்?
ஈ) நாணமிழக்க நடப்போரின் இழிவு எவ்வாறு எடுத்துக் கூறப்படுகின்றது? (15புள்ளிகள்)

4) திருவடி சூட்டுப் படலத்தில் இலக்குமணனுக்கு சமாதானம் கூறுதல் தொடக்கம் தந்தைக்கு நீர்க்கடன் செய்யப் புறப்படுதல் வரையான பாடல்களில்
அ) கடுஞ்சீற்றங் கொண்ட இலக்குமணனுக்கு இராமன் கூறும் சமாதானம்.
ஆ) தந்தை இறந்த செய்தி கேட்டு இராமன் புலம்புதல்.
இ) வசிட்டன் இராமனைத் தேற்றும் முறை என்பன எவ்வாறு அமைக்கப் பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துக. (15புள்ளிகள்)

5) குமரகுருபரர் பாடல் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற பகுதியில்
அ) சந்திரனை தேவியுடன் விளையாட வருமாறு கூறப்படும் காரணங்கள்.
ஆ) சந்திரன் அம்பிகைக்குக் கோபம் உண்டாகுமாறு செய்த செயல்கள்.
இ) விண்ணில் சந்திரன் தங்குமிடங்களில் ஏற்படும் இன்னல்கள் என்பன எடுத்துக் காட்டப்பட்டிருக்குமாற்றினை விளக்குக. (15புள்ளிகள்)

6) "நாகம்மாள்" என்ற நாவலில்
அ) நாகம்மாள் ஆ) சின்னப்பன் இ) கெட்டியப்பன்
என்போரின் குணவியல்புகள் எடுத்துக்காட்டப்படும் முறையினை விளக்குக. (15புள்ளிகள்)

7) சி.வைத்திலிங்கத்தின் "பாற்கஞ்சி" என்ற சிறுகதையில்
அ) முருகேசனுடைய மனத்தில் ஏற்பட்ட பூரிப்பு
ஆ) காமாட்சியின் வேண்டுதல்கள்
இ) பெருநாளை எதிர்பார்ப்பது போல் அறுவடை நாளை எதிர்பார்ப்பது போன்ற விடயங்கள் எத்தகைய முறையில் கதாசிரியரால் எடுத்துச் சொல்லப்படுகின்றன என்பதை விளக்குக. (15புள்ளிகள்)

8) "பண்பாடு" என்ற கட்டுரையில் ராஜாஜி அவர்கள்
அ) பண்பாடு பற்றிய விளக்கம்
ஆ) சமூகப் பண்பாடுகள் பற்றிக் கூறப்படுவது
இ) இன்றைய தமிழர் பண்பாடுகள் என்பவை விளக்கப்படுமாற்றினைக் கூறுக. (15புள்ளிகள்)

9. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ) நாச்சியார் திருமொழியில் திருமண வழக்கங்கள்.
ஆ) கலிங்கத்துப் பரணியில் காட்டின் வெம்மை
இ) நாவலரின் பதிப்பு முயற்சியை சோமசுந்தரப்புலவர் எவ்வாறு கூறுகின்றார்.
ஈ) கம்பதாசன் "உதிர்ந்தமலர்கள்" என்ற கவிதையை எத்தகைய உணர்வோடு பாடுகிறார் என்பதை விளக்குக.
உ) "தேயிலைத் தோட்டத்திலே" என்ற கவிதையில் சி.வி. வேலுப்பிள்ளையின் சமூதாயநோக்கு (15புள்ளிகள்)

## தமிழ் பகுதி II

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிந்தெடுத்து மூன்று வினாக் களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

1. மேல்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்க்ள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ) பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தமிழ்ப்பணிகள்
ஆ) விஞ்ஞானமும் நவீன தொழில்நுட்பமும்
இ) புலம் பெயர் இலக்கியம்
ஈ) திரைகடலோடியும் திரவியம் தேடு
உ) தமிழிற் பிற மொழிச் செல்வாக்கு
ஊ) தமிழர் திருமண நடைமுறைகள் (20புள்ளிகள்)

2. பின்வரும் 'அ' உரைப்பகுதியையும் 'ஆ' செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கல்வி என்பது ஓர் இலக்கன்று. இலக்கை எய்துவதற்கான ஒரு கருவியேயாம். அதாவது நாம் பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும், என்பதற்காக மட்டும் கற்பிப்பதில்லை. அவர்களை வாழ்கைக்குத் தகுதியுடையவர்களாக்குவதே நமது நோக்கமாகும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வோமாயின் பிள்ளைகள் உண்மையிலே வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யத்தக்க கல்வி முறைமை ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானது, என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போற் காண்போம். யாதேனும் ஒரு கல்வி முறைமையை முதலில் கண்ட அளவிலே அதனை அப்படியே ஏற்றுக்கொள்வது நன்றன்று. அவ்வாறே நடைமுறையில் நெடுங்காலமாக இருந்து வரும் பழைய கல்வி முறைமையானது உண்மையிலே பொருத்தமுடையதோ அன்றோ என்று ஆராய்ந்து பாராமல் அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதும் நன்றன்று.

1) இப்பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை உமது நடையில் 30 சொற்களுக்குள்

சுருக்கி எழுதுக?

2) கல்வி முறைமையை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என எழுத்தாளர் கூறுகின்றார்?

ஆ) உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ? கற்றூண்
பிளந்து இறுவதல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

1) இச் செய்யுள் கூறும் கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்குக் குறையாமல் விரித்து எழுதுக.

2) இச் செய்யுளில் காணப்படும் அணியினை விளக்குக. (15புள்ளிகள்)

3) மேல்வரும் பதினைந்து வினாக்களும் (அ),(ஆ),(இ) என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

அ) 1) ஐப்பசி,மகடூஉ-இவ்விரு சொற்களிலுமுள்ள சார்பெழுத்துக்கள் எவை?

2) உரல், பசு, உயரம், பட்டு, துடை, புல் - இவற்றுள் இதழ் குவிந்த உகரமாக உச்சரிக்கப்படும் உகரச் சொற்கள் யாவை?

3) எறி , எரி ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

4) உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை தெரிவு செய்க.
அள்ளு , வெட்கம் , பயிற்சி , தொட்டி , காட்சி.

5) பின்வருவனற்றுள் பகுபதங்களைத் தெரிந்து அதனைப் பகுத்துக் காட்டுக.
அரசி , பட்டம் , படம் , வாழ்க , ஓடி , மாடுகள்.

ஆ)

6) பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயர்களைத் தெரிவு செய்க.
கெட்டிக்காரன் , மன்னன் , தொழிலாளி , நடிகன்

7) யானை பாகனைக் கொன்றது.
பாம்பு அவனைக் கடித்தது.
இச் செய்வினை வாக்கியங்களைச் செயற்பாட்டு வாக்கியங்களாக மாற்றுக.

8) முடி , விடு ஆகியவை முதல் வினைகளாகவும் துணை வினைகளாகவும் வரும் வகையில் வாக்கியங்களை எழுதுக.

9) முறி , விழு ஆகியவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும் செயப்படுபொருள் குன்றா வினைகளாகவும் வரும் வகையில் எழுதுக.

10) பின்வரும் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள பெயரடைகளைக் குறிப்பிடுக.
அவன் படித்த பையனாக இருந்ததால்
பண்புள்ள மனிதனாகக் காணப்பட்டான்.

இ)

11) ஆனால், ஆகவே,அல்லது ஆகிய இடைச் சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.
அவர் கோபமாகப் பேசினார்
அவர் கண்ணியமாகப் பேசினார்

12) "பொற் பெருசலேநகரத் தாயிழையார் வாய்விட்டழுத குரலோசை"
இதனைச் சந்தி பிரித்து எழுதுக.

13) மதிக்குளிர், மதிப்பாளன், மதிமுகம், மதிப்பீடு இவற்றுள் உவமைத் தொகையாது? வேற்றுமைத் தொகை யாது?

14) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இலக்கண வழுக்களைச் சுட்டிக்காட்டி, அதனைத் திருத்துக.
1. பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.
2. ஒவ்வொரு பழங்களும் இனியவை.

15) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக்காட்டி அவற்றைப் பொருள் மயக்கமற்ற முறையில் திருத்தி எழுதுக.
நண்பன் எனக்கு வர வசதியில்லை என்றான். (20புள்ளிகள்)

## பகுதி II

4) அ) சங்கம்மருவியகால இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) அவை கூறும் பண்புகளைத் துலக்குக. (15புள்ளிகள்)

5) அ) சோழர் காலத்து நூல்களைப் பட்டியலிடுக.
ஆ) தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பரின் முக்கியத்துவம். (15புள்ளிகள்)

6) அ) விஜயநகர நாயக்கர் காலத்து இலக்கியங்களின் முக்கிய பண்புகளை விளக்குக.
ஆ) அக்காலத்து எழுந்த பொதுமக்கள் சார்புடைய இலக்கியங்களை விபரிக்க.

## பகுதி III

7) அ) யாழ்ப்பாணத்து அரசர் காலத்தெழுந்த இலக்கியங்களைக் குறிப்பிடுக.
ஆ) அவற்றின் முக்கிய பண்புகளை விளக்குக. (15புள்ளிகள்)

8) அ) 1950 களின் பிற்பகுதியிலிருந்து இற்றை வரையிலான ஈழத்து கவிதை வளர்ச்சியினைத் துலக்குக.
ஆ) ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்குப் பாவலர் துரையப்பாபிள்ளை ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (15புள்ளிகள்)

9) மேல்வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
அ) கனக செந்திநாதன் ஈ) நீலாவணன்
ஆ) பேரறிஞர் சொக்கன் உ) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
இ) கே. டானியல் (15புள்ளிகள்)

*(இந்த வினாக்களின் விடைக்குறிப்புகள் 28.03.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)*

***விடைக் குறிப்புகள்***

வெளியீடு 01

# இந்து நாகரிகம்

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை 2006 ஏப்ரல்**

## இந்து நாகரிகம் 1

1) 1.1 -1 1.2-1 1.3-5 1.4-2 1.5-3 1.6-☒
1.7-☑ 1.8-☒ 1.9-☑ 1.10-☒
1.11- இறைவனோடு ஒன்றாகுதல்
1.12-நாரத பஞ்சராத்திரம்
1.13-1923.03.29
1.14- பொன்வண்ணத்தந்தாதி, திருக்கைலாய ஞான உலா, திருவாரூர் மும்மணிக் கோவை
1.15- குளக்கோட்டன், கஜபாகு
1.16- கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம்
1.17-பாலகாண்டம், அயோத்தியகாண்டம், கிஷ்கிந்தைகாண்டம், ஆரண்ய காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம்.
1.18- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
1.19- கி.பி 788
1.20-கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருஏகம்பமுடையார் திருவந்தாதி, திரு வொந்நியூர் ஒபா ஒருபது. திருவிடை மருதூர் மும்மணிக் கோவை,

## பகுதி "ஆ"

02) அ) உபநிடதங்கள் கூறும் கடவுட்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.
✱ ஒவ்வொரு சமயப் பிரிவு கட்டும் ஒவ்வொரு ஆகமம் உண்டு
✱ ஒவ்வொரு ஆகமங்களும் ஒவ்வொரு முழுமுதற் கடவுள்களை கூறு.
✱ சிவாகமங்கள், வைணவ ஆகங்கள், சாக்த தந்திரங்கள் கூறும் கடவுட் கோட்பாடு....
ஆ) ✱ ஆகமங்கள் விக்கிர அமைப்பு பற்றி விளக்கும்
✱ விக்கிரம் அமைப்பதற்கான கல் வகை
✱ அமைப்பும், தெய்வீகத்தன்மை பெறச் செய்தலும்
✱ பிரதிஷ்டை
✱ விக்கிரகங்களும் திசைகளும்
இ) ✱ ஆத்மார்த்த கிரியைகள்
✱ [illegible]ார்த்தக் கிரியைகள்
ஈ) ✱ ஞானபாதத்தினூடாக முத்திகிடைக்கும்
✱ முத்தி பற்றிய விளக்கம்
✱ சைவாகமமும் நால்வகை முத்தியும்
✱ வழிகள் (20புள்ளிகள்)

02) அ) வேதம், குப்தர்காலம், நாரதீயபுராணம், 5ஆம் நூற்றாண்டு, புராணக்கதை, நந்திக்கலம்பகம் ..........................
ஆ) தந்திரங்கள், விநாயகர் புராணம், மகாநிர்வான தந்திரம், விநாயகர் அகவல்...
இ) ✱ ஆசனம், நிலை, உருவப் பொலிவுகள்
✱ யானைமுகம், ஒற்றைக்கொம்பு, லம்போதரம், முக்கண்கள்
✱ ஐந்தொழில் தத்துவம்
ஈ) ✱ சைவத்தில் முதன்மை, பிள்ளையார் சுழி, அத்திபாரம் இடுவில், நிலைபூட்டுதல் வழிபாட்டு முறைகள், கோயில்கள், பிரதேசப் பரவல் (20 புள்ளிகள்)

04) ✱ நூல்கள், அரச ஆதரவும் அரச சின்னங்களும், சமய வளர்ச்சி, கட்டிட, சிற்பக்கலை வளர்ச்சி, தத்துவ சிந்தனை. (20 புள்ளிகள்)

05) அ) ✱ பொது அறிமுகம்
✱ பக்திமார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் இணைத்தவர்
✱ பிரஸ்தான திரய உரை
✱ ஏனைய நூல்கள், திக்விஜயம்
✱ 74 பீடங்களளை நிறுவியவர்
✱ தலயாத்திரைகளும், வாதப்பிரதி வாதங்களும்
ஆ) ✱ வைணவ மரபில் கோயில் வேறு பெயர்கள்
✱ இராமானுஜர் காலத்தில் உன்னத நிலை
✱ ஸ்ரீரங்க பீடாதி பதியும் பணிகளும்
✱ மடம் அமைத்து விசிட்டாத்வைத போதனை
இ) விசிட்டாத்வைத தத்துவ சுருக்கம் (20 புள்ளிகள்)

06) அ) ✱ விஜயராஜ சதுர்வேதி மங்கலம், மகாகிரித்தேகமத்து·சதுர்வேதி மங்கலம்
✱ கந்தளாய் பிரமதேயம்
✱ பிரமதேயச் சபையும் வேலைக்காரரும்
✱ கஜபாகுவும் கந்தளாய் பிரமதேயமும்.
ஆ) ✱ திருக்கேதீஸ்வரம் , திருக்கோணேஸ்வரர்
✱ புனரமைப்பு
✱ ஏனைய கோயில்கள், ஆலய தர்மங்கள்
✱ தேவார பாடல் வர்ணனைகள்
இ) ✱ கட்டடக் கலைக்கான ஆதாரம்
✱ 3ஆம் ஆலயம் - விஷ்ணு கோயில்
✱ பஞ்சரம், கோட்டம் கொண்ட அமைப்பு
✱ விக்கிரகக்கலை ✱ ஓவியக்கலை
ஈ) ✱ சில ஆலயங்கள் சமூகத் தொடர்புடையன
✱ சதுர்வேதி மங்கத் தொடர்பு
✱ பௌத்த - இந்துமதத் தொடர்பு
✱ வணிகத் தொடர்பு (20புள்ளிகள்

07) ✱ காலம்
✱ அரசியல் நிலை
✱ தென்னாட்டு பக்தி பரவல்
✱ இராமானுஜர் வருகை
✱ அருளாளர்களும் பணிகளும் (20 புள்ளிகள்

08) அ) ✱ காலம், சூழ்நிலை
✱ பாடசாலை நிறுவல்
✱ கண்டனங்கள்
✱ பிரசங்கம், புராணபடனம், பிரபந்தம்
✱ நூல்கள்
ஆ) சைவப் பிரகாச வித்தியாசலை
✱ அச்சியந்திரசாலை
✱ நூல்கள்
✱ மொழிக்கல்வியில் மாற்றம்
✱ சி.வை. தாமோதரம்பிள்ளை
✱ பழந்தமிழ் பதிப்பாசிரியர் (20 புள்ளிகள்

09) ✱ சூழ்நிலை
✱ பிரதான தத்துவக் கருத்துக்கள்
✱ நால் வகை யோகம் (20 புள்ளிகள்

10) அ) ✱ சைவ மரபில் கோயில்
✱ பாடல் பெற்ற தலம்
✱ பெரியபுராணம் அரங்கேற்றம்
✱ இறைவன் - இறைவி
✱ கட்டடப் பகுதிகள் சபைகள்
ஆ) ✱ சூழ்நிலை
✱ மடங்களில் இருந்து ஆதீனங்கள் வேறுபடும் தன்மை
✱ பிரதான ஆதீனங்கள்
✱ மாணியங்கள்
✱ சமய, சமூக, கல்விப் பணிகள்.
இ) ✱ சேக்கிழாரால் பாடப்பட்டது.
✱ 12 ஆம் திருமுறை
✱ நாயன்மார், 9 தொகையடியார்கள் வாழ்க்கை
✱ 13 பகுதிகள் 4250 பாடல்கள்
✱ சுந்தரர் காப்பியத்தலைவன்
✱ சாந்தி மந்திரம்
✱ "உலகெலாம் ....." என இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டது.
ஈ) ✱ 7 புனித நகரங்களில் ஒன்று
✱ மகோதை, காதி புரம் என்பன மறு பெயர்கள்
✱ வித்யா பீடங்களும் கலா நிலையங்களும்
✱ புலவர், கலைஞர்
✱ அரச ஆதரவு

*(இந்து நாகரிகம் விடைக் குறிப்புகளின் தொடர்ச்சி 28.03.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)*

வெளியீடு 01


## முதலாம் தவணைப் பரீட்சை தரம் 9

## மாதிரி வினாப்பத்திரம்

2 மணித்தியாலம் **கணிதம்**

திரு. சு. சிவானந்தன் யாழ் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)

01. உருவில் **ABCDE** ஒழுங்கான ஐங்கோணி ஆகும்.
பின்வருவனவற்றைக் காண்க.




1. $A\hat{B}C$யைக் காண்க.
2. $B\hat{A}C$யைக் காண்க.
3. $C\hat{A}D$யைக் காண்க.
4. $A\hat{C}D$யைக் காண்க.
5. $B\hat{A}C, C\hat{A}D, D\hat{A}E$ என்பவற்றிக்கு இடையிலான தொடர்பு யாது?

02. **x=5, y= -3** எனின் பின்வருவனவற்றின் பெறுமானங்களைக் காண்க.
1. $4x - 2y$
2. $x^2 - y^2$
3. $2[3x + 5y]$
4. $\frac{x^2 + 5y}{-2x}$

03. சுருக்குக.
1. $2x^3 \times 3y^4$
2. $12a^5 \div 4a^2$
3. $\frac{(P^2)^3 \times P}{P^{10}}$
4. $\left[\frac{(a^3)^2 \times a}{a^4}\right]^2$

04. சுருக்குக.
1. $(a+3)\ (a+2)$
2. $(2x-3)\ (x+1)$
3. $(3 -P)^2$
4. $(x + 1/2)^2$



மேலுள்ள உருவில் எழுத்திடப்பட்ட கோணங்களைக் காண்க.

06. $\sqrt{72}$ இன் பெறுமானத்தை இரண்டாம் அண்ணளவாக்கம் மூலம் காண்பதற்கு பின்வரும் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

$\square < 72 < \square$

$\sqrt{\square} < \sqrt{72} < \sqrt{\square}$

$\square < \sqrt{72} < \square$

$\sqrt{72} =$ (முதலாம் அண்ணளவாக்கம்)

$\sqrt{72} =$

$\sqrt{72} = \frac{\square + \square}{2} = \square$ (இரண்டாம் அண்ணளவாக்கம்)

07. 1. **50cm x 40cm x 30cm** அளவுடைய பாத்திரம் ஒன்று கொள்ளும் நீரின் கன வளவை லீற்றரில் காண்க.
2. மேற்படி பாத்திரத்தினுள் 40 l நீரில் ஊற்றப்பட்டால், பாத்திரத்தில் நீரின் உயரம் யாது?
3. மேற்படி பாத்திரத்தின் அரைப்பங்கு நிரம்பியிருக்க வேண்டுமெனில் பாத்திரத்திலிருந்து எவ்வளவு நீர் வெளியேற்றப்பட வேண்டும்.
4. மேற்படி பாத்திரம் முற்றாக நிரம்பியிருக்கும் போது பாத்திரத்தில் உள்ள நீர் முழுவதையும் குழாய் ஒன்றினூடாக வெளியேற்ற 4 நிமிடம் எடுத்ததெனின் 1 செக்கனில் எவ்வளவு நீர் வெளியேறியது என காண்க.

08. 1. 49501 ஐ கிட்டிய ஆயிரத்துக்கு மட்டம் தட்டுக.
2. 7.397 ஐ கிட்டிய இரண்டாம் தசம தானத்ததிற்கு மட்டந்தட்டுக.
3. 243500 000 ஐ விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் எழுதுக.
4. $7.235 \times 10^5$ ஐ பொதுவான் முறையில் எழுதுக.
5. 0.000543 ஐ விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் தருக.

09. **A** = {10 இலும் குறைந்த முக்கோணி எண்கள் } எனின்
1. **A** யின் மூலகங்களை இரட்டை அடைப்புக் குறியினுள் எழுதுக.
2. தொடை **A** யின் தொடைப் பிரிவுகள் அனைத்தையும் எழுதுக.
3. தொடை ஒன்றின் முதலிமை 6 எனின் அதன் தொடைப் பிரிவுகள் எத்தனை?
4. தொடை ஒன்றின் தொடைப் பிரிவுகள் 256 எனின். அத்தொடையின் முதலிமை யாது?

10. $\Delta ABC$ யில் **BC= 7cm, ABC=45$^O$, ACB = 60$^O$** ஆகும்.
1. $\Delta ABC$யை வரைக.
2. **A,B** எனும் புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கை வரைக.
3. **AB,BC** எனும் நேர்கோடுகளிலிருந்து சம தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கை வரைக.
4. மேற்படி இரு ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளியை **O** எனப் பெயரிடுக. **O**வை மையமாகக் கொண்டு எனும் புள்ளிகளினூடாகச் செல்லும் வட்டத்தை வரைக.
5. **OAC**யைக் காண்க.

Publication 01

## Alternative Questions English Language

## First Term Exam – 2006

Grade -11 Model Paper


MI. Ameer Ali (B.A, Dip-in-English)
*(KM/Al Ashraq National School – Ninthavur)*

**01. Put the right forms of pronouns in the spaces**
1. I expect family's help, and my families expect………………………….help.
2. Nimal depends on…………………..parents, and…………………..his parents depend on……………earning.
3. She is searching…………………partner…………………partner in the abroad.
4. The bag is not……………………..because……………..color is red
5. We all obey…………………...teachers, and our teachers also like …………………………
6. They had…………………….. Lunch, Kamal also joint with ………………………………
7. Because of some sadness, I was crying……………………………

**02. Complete the following dialogue. The first one is done for you**

Eg.
1. Anees : What is this Aathil?
Aathil: It is a lump of clay

Eg : A : What will happen to it.
If I press it?
B : If you press it, it will change its shape



A: What is this Aathil?
B:……………………………………….
A: What will happen to it. If I drop it.
B:……………………………………….



A: What is this Aathil?
B:……………………………………….
A: What will happen to it.
If I drop it?
B: ……………………………………….




A: What is this?
B:……………………………………….
A: If you win the lottery what will you do?
B:……………………………………….

**03. Read the passage answer the question given below.**

1)Marconi was born in Italy on 25th April 1874. His parents were wealthy and he was taught at home by tutors. He loved to read and was especially fond of reading books on physical science. When he was about fourteen years old, he listened to some talks on electricity at a local technical school. Shortly afterwards, an old blind telegraphist taught him the Morse code.

Marconi spent his leisure carrying out experiments. He used an old jam-jar filled with water and a few piece of wire and odds and ends. He carries out the experiments in corner of his garden because he thought his father laugh at him. His mother encouraged him in his work and even gave him a room in the room in the house to carry out his experiments.

Soon his room was full of apparatus but he was not able to invent anything important. His father thought that Marconi was wasting time.

UN 1984 Marconi spent a holiday in Switzerland. One evening he came across an article in a news paper. It described the work of Heinrich Hertz who had found out that there are waves of energy which travel thought space. After reading it, Marconi made up is mind to find out whether these waves could be used for sending out messages and receiving them….

1. What were Marconi's hobbies?
2. How did Marconi find out about Heinrich Hertz's work?
3. Who taught Marconi the Morse code?
4. How did his mother encourage Marconi is his work?
5. Why did his father think Marconi was wasting his time?

**04. Write a letter of requesting to your class teacher for not attending the school because of your illness use – 50 to 60 words.**
Write a letter about your favorite teacher to your mother. (use about 30-40 words)

**05. There is a meeting for G-11 students for the day of women. Now imagine you are a secretary of your school and write a notice**

**06. Fill in the blanks with suitable verb given bracket**
1) I am………………… (think) about you
2) She has …………………… (go) to Kurunagala
3) Reeha………………………. (Sit) near the fahim before three hours.
4) He……………………(come) to school everyday
5) They will be …………………(write) a letter
6) Have you…………………….. (Eat) your lunch?

**07. Describe the picture using with "There is, or There are…)**



1. There is ………………………………………
2. There are ……………………………………
3 ………………………………………………
4 ………………………………………………
5 ………………………………………………

**08. Choose the correct word for each blanks**
(Aren't, Isn't) 1) ……………………..you the person I met at the party?
(aren't, isn't) 2) these………………… the right answer
(Wasn't),weren't)3)……………………you in school yesterday?
(wasn't weren't)4) they…………………..in my class last year
(Doesn't, Don't)5)……………………..you have a pen?
(doesn't, don't) 6) …………………No, She………………..have more money
(doesn't, don't) 7)Mazoon……………………have a brother.

**09. Complete these with the correct word from the brackets**

1) This man is an honest and conscientious worker. He will never…………… …………………a bribe (accept, except)
2) The old man's writing is……………………….sometimes he cannot read what he writes. (eligible, illegible)
3) He is suffering from an incurable…………………………..(disease, decease)
4) The boy did not listen to his mother's……………………..(advise, advice)
5) The……,………………..immigrants were caught by the police. (elicit, illicit)

**10. Fill in the blanks with following words…………………………………….**
(predicted, promised, cured, visited, shouted, welcomed, sprinkled, remained)

1) A clever doctor……………………… The blind boy.
2) Last week the students of Imam Gazzaly Vidyalaya………………………… places of historical interest
3) Thowfeek borrowed some books from his friend and……………………… ….. to return it in two months' time.
4) Amany's parents stood at the entrance to their house…………………… ……… the visitors who came to the wedding.
5) Scientists have……………………that man would go to mars before the end of the twentieth century.
6) When Sajan was attacked by a dog, he…………………for help.
7) Jana……………………….some water on the flowers to receive them.
8) Even after the small-pox patient was cured, the scars……………………….

**11. Match the words in 'A' with their meanings in 'B'**

| A | B |
|---|---|
| to transmit | to respect |
| to award | to make less |
| to boast | to praise oneself |
| to announce | to give support |
| to reduce | to grant |
| to honour | to send out |
| to persevere | to make known |
| to encourage | not to give up |

**12. Complete the following dialogue. Use the words / phrases given in the box. The first one is done for you.**

Son: Father, you are carrying a huge sack. (1.It is heavy)
Father: yes, my son 2…………………………………………………
Son: I was collecting 3…………………………………………………
Father: 4…………………………………………….a lot of dung
Son: yes, father 5…………………………………………………
Father: we have a long way to go. Still we are………………………

* Near the down gate
* What have you been doing?
* For our cooking fire
* This basket is full
* Did you collect
* Is it heavy?

**13. Read the following and fill in the blanks**

Announcer: English News Readers.
There are five vacancies in our Institute for English News Readers. If you have a distinction in English at G.C.E.(O/L), posses a clear voice with flair for announcing, a good knowledge
Of current affairs and in the age group of 18-25, call over at the office of the Personal Manager on 23rd April at 10.00 am. for more information contact Personal Manager on 860502. Make use of this opportunity.

English News Readers:
No: of Vacancies 1……………………………………………
Qualificationrequired 2…………………………3……………………
(Voice) (Education)
4……………………………………
(Knowledge)
Special ability 5……………………………………
Age group 6……………………………………
Who to meet 7……………………………………
When 8…………………………… 9……………………
(Date, Month) (Time)
Contact No. for more information 10……………………………………………

**14. Underline the most suitable word that fills blanks. The first one is done for you,**

Thrift or frugality is clearly1………seen……….. (see, saw, seen) in the daily life of Sahalian Nomads another African tribe. Even housing is not2………..(luxury, luxurious, luxury) and is made of 3…………………(easy, easier, easily) to dismantle vegetable matter.. the basic diet consists of 4…………..(diary, dairy, dary) products. Above all, water is used very 5………………(care, careful, carefully) one of their proverbs is (Tomorrow is not 6…………….(today today's todays) guest, but we must put something aside for tomorrow.

**15. Write a short paragraph on one of the following (use about 100 words)**

a. Thajmahal
b. A natural place you visited
c. An accident you saw

**16. Write on any one of the following. Use about 200 words**

1 Why we study English
OR
2 How banks help the customers

…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………

Publication **01**

## Alternative Questions English Language
## First Term Exam – 2006
### Grade -10 Model Paper

MI. Ameer Ali (B.A, Dip-In-English)
*(KM/Al Ashraq National School – Ninthavur)*

**01)Match the meaning of the words under 'A' with words under 'B'. put the correct number in the boxes under 'A'**

| | | |
|---|---|---|
| 01. Environment | ……………… | Forward or onward movement |
| 02. Progress | ……………… | Affecting people's lives |
| 03. Wonderful | ……………… | A collection of document |
| 04. Article | ……………… | Very Surprising |
| 05. Paradise | ……………… | Thing inherited from ancestors |
| 06. Migrant | ……………… | Share or amount paid |
| 07. Contribution | ……………… | Story handed down from the past |
| 08. Indigenous | ……………… | Ideal or perfect place |
| 09. Fascination | ……………… | Attraction of something |
| 10. Legend | ……………… | Person or animal who moves to another place |
| 11. Accompany | ……………… | Very large in size |
| 12. Huge | ……………… | Well known things |
| 13. Famous | ……………… | Walk or travel as a helper |
| 14. Crevice | ……………… | A think crack |
| 15. Heritage | ……………… | belonging naturally |

**02) Read the passage and complete the following by choosing (A), (B), or (C)**

Long ago, in Tibet, there was a king who was fond of eating fish everyday, and he could never enjoy his meals without it.

Once there was a draught in Tibet, and all the rivers and the lakes dried up. The servants could not find any fish for this king. So he was very angry and he said to them, "I won't eat my meals without fish. You get some fish for me from somewhere. Tell the people about it. They may find some fish for me I'll give a handsome reward to the man who brings me some fish. A poor villager had some salted fish in his house. He heard about the king's reward and said to himself "I'll give the salted fish to the king. Then I can get the reward". So he took the fish to the place and said to the place guard, "could you please allow me to go in? I have brought some fish for the king".

The guard thought for a moment – "why shouldn't I take the fish to the king myself. Then I can claim the reward". So he said, " I cannot allow you to go into the palace. Sell that fish to me. I'll pay you well"

The villager did not want to sell the fish to the guard. He insisted on going to see the king. At last the guard said, " All right. I'll let you go in but you must make me a promise. The king will give you a handsome reward. Will you promise to give me half of it
"Yes, I will" said the villager, and then he was allowed to go before the king.

1) …………………………………………did not allow the villager to enter the place
   a) The guards
   b) The place guard
   c) The king's men
2) ………………………..took some fish to the place
   a) The Kings men
   b) The place guard
   c) A Village
3) One during a drought all the rivers and lakes had
   a) No water
   b) A lot of water
   c) A little water
4) There was a king in Tibet who…………………………………………………
   a) Did not eat any fish at all
   b) Had fish for every meal
   c) Had salted fish for every meal

**03) Fill in the blanks with who, which or whose**

1. Dr. Jabir,……………examined Mazoon, is a specialist
2. Mr. Abdul Rahman,………………….. Article appeared in a news paper, is a famous poetry
3. His bus………………….. knocked down fazly, was taken to the police station
4. I saw a famous artist…………………. Was staying at a small hut.
5. he is going to marry a lady………………..parents are very rich

**04) Change into passive. Examples are done for you (I, II, III, IV)**

I) I eat an orange – active voice.
An orange is eaten by me – Passive Voice
II) She ate an orange.
An orange was eaten by her.
III) He eats two mangoes.
Two mangoes are eaten by him.
IV) They packed many booked.
Many books were packed by them.

01) He thinks about his brother.
……………………………………………
02) They invited me.
……………………………………………
03) I discovered many problems.
……………………………………………
04) She writes two books.
……………………………………………
05) You built a home.
……………………………………………

**05) Complete the following sentences using the prepositional phrases given below**

In a careless manner, in a happy mood, with great enthusiasm, in a hurry, a rough voice]

1. The man who spoke……………………………………………is neighbor
2. The bag who us ruining……………………………………….is Rana